பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 06 வியாழக்கிழமை 19.04.2018 கதிர் 164

ஐ.தே.கவின் சீரமைப்புக் குழு இன்று கூடுகிறது

கொழும்பு, ஏப்.19
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பதவிகள் 19 ஆம் திகதி நிரப்பப்படுமெனஅறிவிக்கப்பட்ட நிலையில் இன்று கட்சியின் மறுசீரமைப்புக் குழு கூடவுள்ளது.

பக்கம் 14

அரசமைப்பு உருவாக்க நகர்வு இல்லையெனில்

எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் நீடிப்பது ஏன்?

அமைச்சர் மனோ காட்டமான கேள்வி

கொழும்பு, ஏப்ரல் 19

அரசமைப்புப் பணிகளை மீள ஆரம்பிக்க முடியாவிட்டால், எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருந்து சம்பந்தன் விலகுவதே நல்லது.

- இவ்வாறு ஆலோசனை கூறியுள்ளார் அமைச்சர் மனோ கணேசன்.

பக்கம் 04

மீண்டும் அரசுடன் இணையும் எஸ்.பி.

கொழும்பு, ஏப்.19
பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மீண்டும் அரசில் இணையத் தயாராகி வருகிறார் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரசில் மீண்டும் இணைவது குறித்து எஸ்.பி. திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்

பக்கம் 04

மாந்தை கிழக்கின் ஆட்சி ஐ.தே.கவின் வசமானது!

முல்லைத்தீவு, ஏப்.19
முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியுள்ளது.

தவிசாளராக மகாலிங்கம் தயானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உத

பக்கம் 03

இலங்கை ஊடகங்கள் மீது ஜனாதிபதி கடும் காய்ச்சல்

பொய்யான செய்திகளை பரப்புவதாக லண்டனில் சாடல்

லண்டன், ஏப்.19
இணையத்தளங்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை நீங்கள் அறியந்து கொள்கிறீர்கள் என நான் அறிவேன். இணையத்தினூடாக பெற்றுக் கொள்ளும் பிரகடனங்கள், செய்திகள் என்பவற்றுள் 75 சதவீதத்துக்கும் அதிகமானவை உண்மையான வையல்ல.

- இவ்வாறு ஜனாதிபதி

பக்கம் 14

இலங்கைக்கு வருகிறார் சூகா



கொழும்பு, ஏப்.19
ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகா அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார். இலங்கை அரசின் அழைப்பை ஏற்று அவர்

பக்கம் 14

ஜனநாயகத் தமிழரசின் உதவியுடன் துணுக்காயில் கூட்டமைப்பு ஆட்சி

முல்லைத்தீவு, ஏப்.19
ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் உதவியுடன் துணுக்காய் பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

பக்கம் 03

2019 ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவாராம் மைத்திரி

கூறுகிறார் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு, ஏப்.19
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தகுதியான வேட்பாளர் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்

பக்கம் 14

பதவியை நிராகரித்த விஜேதாஸ

கொழும்பு, ஏப்.19
உத்தேச அமைச்சரவை மாற்றத்தின்போது, ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் மீண்டும் அமைச்சராகப் பதவி ஏற்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனையை முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நிராகரித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனையை அவர் நிராகரித்

பக்கம் 04

சதியைப் பற்றிப் பேசுவதற்கு யோக்கியமற்றவர் சுமந்திரன்

சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.19
சதியைச் செய்பவரே சதியை நேரே பார்த்தேன் என்றுகூறுவதில்எந்தவித அர்த்தமும் இல்லை. சதியைப் பற்றிப் பேசுவதற்கு சுமந்திரனுக்கு யோக்கியமும் கிடையாது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல். எவ்.

பக்கம் 14

முள்ளிவாய்க்கால் நினைவு நாளை ஒற்றுமையாக நினைவு கூர்வோம்

யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19
மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனைவரும் ஒற்றுமையாக நினைவு கூரவேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மாணவர் ஒன்றியம் இவ்வாறு கூறியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வரு

பக்கம் 04

இனி துரகசியம் அல்ல!

புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி முட்டுச் சந்தியில் வந்து முடங்கி நிற்கின்றது என்பது அரசியல் புரிந்த அனைவருக்கும் தெரிந்த விடயம்தான்.

சிங்களத் தரப்புகளை நம்பி இந்தக் கூட்டு முயற்சியில் சேர்ந்திறங்கிய சம்பந்தன், சுமந்திரன்குழுவினர் அடுத்தது என்ன செய்வது என்று

பக்கம் 03

ஈழத் தமிழர் உரிமை பெற உதவவேண்டும் இந்தியா!

சென்னையில் விக்கி கோரிக்கை

சென்னை, ஏப்.19
இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க இந்தியஅரசுஉதவவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள அவர் அரசு சித்த மருத்துவக்

பக்கம் 14

விக்கி சரியான முடிவெடுத்தால் ஈ.பி.ஆர்.எல்.எவ். அவர் பக்கம்

கூறுகிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.19
வடக்கு மாகாண முதலமைச்சர் சரியான கொள்கையை வகுத்துச் செயற்பட்டால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் அவருடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளது.

-இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாண முதல

பக்கம் 04

காலைக்கதிர் Kalaikkathir

அமெ. பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகைத் திட்டத்தின் ஒரு கட்டமாக

பெரிய மிதக்கும் மருத்துவமனை கப்பல் இலங்கைக்கு வருகிறது!

கொழும்பு, ஏப். 19

அமெரிக்காவின் பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, அமெரிக்கக் கடற்படையின் பெரிய மிதக்கும் மருத்துவ மனை கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

சான் -டியேகோவைத் தளமாகக் கொண்ட USNS Mercy என்ற மருத்துவமனைக் கப்பல் தற்போது மலேசியாவில் தரித்துள்ளது. அங்கிருந்து இந்தக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது.

2018 ஆம் ஆண்டு அமெரிக்கா மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண

தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக ஆசிய- பசுபிக் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு கப்பல்களை ஈடுபடுத்தியுள்ளது.

இதற்கமைய பெப்ரவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதியில், USNS Mercy என்ற மருத்துவ மனைக் கப்பல் இந்தோனேஷியா, மலேசியா, இலங்கை, வியட்னாம் ஆகிய நாடுகளுக்கும், USNS Fall River என்ற கப்பல், மலேசியா, தாய்லாந்து, மைக்ரோனேசியாவில் உள்ள யாப் ஆகிய இடங்களுக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளன.

தற்போது, USNS Mercy என்ற அமெரிக்கக்கடற்படையின் பெரிய மிதக்கும் மருத்துவமனை அடுத்து இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

கரம்பன் கிழக்கு ஞான வைரவர் மஹா கும்பாபிஷேகம்

கரம்பன், ஏப்.19

கரம்பன் கிழக்கு ஞான வைரவர் மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் காலை 10 மணி முதல் விநாயக வழிபாடும், கணபதி ஹோமமும் நடைபெறும்.

சனிக்கிழமை காலை 8 மணி முதல் விநாயக வழிபாடும், விஷேட வாஸ்து சாந்தியும் அஷ்டபந்தனமும் இடம் பெறும்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகமும், தொடர்ந்து 11 நாள்கள் தூபி அபிஷேகமும் நடைபெறும்.

தொடர்ந்து 11 நாள்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

மகோற்சவம்

காரைநகர், ஏப்.19

காரைநகர் கருங்காலி போசுட்டி அருள்மிகு முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மகோற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வியாவில் ஐயனார் தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

ஐ. தே. கட்சியின் புதிய பதவிகள் தொடர்ப்பில் இன்று தீர்மானம்!

கொழும்பு, ஏப். 19

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பதவிகள் தொடர்பில் ஐ.தே.க. மத்திய செயற்குழு இன்று தீர்மானம் எடுக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10 ஆம் திகதி கட்சியின் செயற்குழு புதிய பதவிகள் தொடர்பில் கலந்துரையாடியது.

இவற்றுள் பிரசார செயலாளர் மற்றும் தொழிற்சங்க செயலாளர் பதவி என்பன அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

மைத்திரி நாடு திரும்பியதும் அடுத்த கட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 19

நல்லிணக்கம்மற்றும்சமாதானத்தை பலப்படுத்துகின்ற செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்கின்றோம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியவுடன் சந்தித்து விசேட பேச்சுக்களையும் நடத்த எதிர்பார்த்துள்ளோம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

தமிழ் – சிங்கள சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு அரச தலைவர்களின் சம்பிரதாயங்களில் ஒன்றான கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபடுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை கண்டிக்கு விஜயம் மேற்கொண்டார்.

தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர், பௌத்த மக்களின் பெருமதிப்புக்குரிய மதத் தலைவர்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்துப்பீட மகா நாயக்க தேரர்களைச் சந்திப்பதற்காகப் பிரதமர் சென்றார்.

இந்தச் சந்திப்புக்களை நடத்திய பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்குகருத்துவெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் புதிய திட்டத்தின் ஊடாக முன்செல்ல எதிர்பார்க்கின்றோம். கடந்த வருடத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தோம். குப்பை மேடு சரிவு, வெள்ளம், வறட்சி உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்பட்டன. எவ்வாறாயினும் சிங்கள, தமிழ் புதுவருடப் பிறப்பு காலத்தில் சாதாரண விலைகளில் பொருள்களை வழங்க கிடைத்தது. இந்த வேலைத் திட்டங்களை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம் – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப் பெரிய விமானம் மத்தளவில் தரையிறங்கியது!

கொழும்பு, ஏப். 19

உலகின் மிகப்பெரிய- இராட்சத விமானம் இலங்கையின் மத்தள அனைத்துலக விமான நிலையத்தில் நேற்றுக் காலை தரையிறங்கியுள்ளது என விமான நிலைய முகாமையாளர் உபாலி கலன்சூரிய தெரிவித்துள்ளார்.

Antonov An-225 Mriya வகையைச் சேர்ந்த இந்த இராட்சத சரக்கு விமானம், எரிபொருள் நிரப்புவதற்காகவும், விமான பணியாளர்கள் ஓய்வெடுப்பதற்காகவுமே மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

கோலாலம்பூரில் இருந்து வந்துள்ள இந்த விமானம் எப்போது புறப்பட்டுச் செல்லும் என்று இன்னமும் திட்டமிடப் படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

1980 ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தில் உக்ரேன் இருந்தபோது, இந்த Antonov An- 225 Mriya இராட்சத சரக்கு விமானம் வடிவமைக்கப்பட்டது.

ஆறு டர்போபான் இயந்திரங்களைக் கொண்ட இந்த விமானம், 640 தொன் எடையைச் சுமந்து செல்லக் கூடியது.

உலகில் தற்போது சேவையில் உள்ள விமானங்களில் மிகப் பெரிய இறக்கை

யைக் கொண்டதும் இந்த விமானம் தான்.

விமானத்தின் நீளம், 84 மீற்றர். அதன் இறக்கைகளின் நீளம் 88 மீற்றராகும்.

இந்த இராட்சத விமானம் கடந்த ஆண்டும், ஆஸ்திரேலியாவில் இருந்து மும்பை செல்லும் வழியில், மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியமை குறிப்பிடத்தக்கது.

(க)

காரைதீவு மாளிகைக்காடு உபநூல் நிலையத்தில் தீ!

மட்டக்களப்பு, ஏப். 19

காரைதீவுப் பிரதேச சபைக்கு உட்பட்ட மாளிகைக்காடு உப நூல் நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இதனைக் கேள்வியுற்ற காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நேரடியாக அங்கு சென்று பார்வையிட்டு

உரிய நூலகரிடம் வாக்கு மூலத்தைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன், நூலகத்தில் இருந்து பத்திரிகைகளும் எரியூட்டப்பட்டிருந்தமையுடன் அலுமாரியொன்றின் கண்ணாடி சேதமாக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இனந்தெரியாத விசமிகள் நூலகத்துக்குத் தீ வைத்திருக்கலாம் என நம்பப்படுவதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்று வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுபட்ட தொண்டராசிரியர்கள் பலர் நீதி வழங்கக் கோரி பத்தரமுல்லையில்

கொழும்பு, ஏப்.19

வடக்கில் பல வருடங்களாகத் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றித் தற்போது இடம் பெறவுள்ள நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படாமல் விடுபட்ட தொண்டராசிரியர்கள் பத்தர முல்லை கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நீதி கோரித் திரண்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் சுமார் பத்து வருடங்களுக்கு மேல் தொண்டராசிரியர்களாகக்கடமையாற்றிய நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள ஆசிரியர் நியமனத்திற்கு உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வுக்கு அழைப்பட வில்லை. இதில் பல ஆசிரியர் கள் ஏற்கனவே இடம்பெற்ற நேர் முகத் தேர்வுகளுக்கு சென்று வந்தவர்கள் என்றும், இருந்தும் இந்த நேர்முகத் தேர்வுக்கு இவர் களுக்கான கடிதங்கள் அனுப்ப படாமையால் நீதி கேட்டு மத்திய கல்வி அமைச்சின் அலுவலகத் திற்குச் சென்றுள்ளனர் எனவும் கூறப்பட்டது. இவர்களில் பலர் குழந்தைகளுடன் சென்றுள் ளமை வேதனைகுரியது.

வடக்கு மாகாண சபை செய்ய வேண்டிய பணிகளை அவர்கள் தாங்கள் செய்ய முடியாது என அறிவித்தமையால் மத்திய கல்வி அமைச்சினால் நேர்முகத் தேர் வுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது என்றும், உண்மை யிலேயேஇந்தப்பணிகளைவடக்கு மாகாணக் கல்வி அமைச்சே பார்க்கவேண்டும் என்றும் மத் திய கல்வி அமைச்சின் அதிகாரி களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அங்கு சென்றுள் ளதைஅறிந்தமுன்னாள்நாடாளு மன்ற உறுப்பினர் மு. சந்திர குமார், பத்தரமுல்ல கல்வி அமைச்சின் அலுவலகத்திற்குச் சென்று இராஜாங்க கல்வி அமைச்சர் வே.இராதாகிருஷ்ண னைச் சந்தித்து இது குறித்து உரையாடியமையோடு நீதி கோரிச் சென்றுள்ள தொண்ட ராசிரியர்களையும் சந்தித்துள் ளார்.

இதன்போது கருத்து தெரி வித்த அமைச்சரும், அமைச்சின் செயலாளரும், தாங்கள் விடுபட்ட ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்டி அதன் உண்மைத் தன் மையை அறிந்து உரிய நடவடிக் கையை எடுப்பார்கள் எனத் தெரி வித்துள்ளனர்.

மாகாண சபைக்களுக்கான அதிகாரப் பரவாக்கல் பற்றித் தொடர்ந்தும் பேசி வரும் வடக்கு மாகாண சபையினர், கல்வி விடயம் தொடர்பில் தங்களுக்கு உள்ள அதிகாரத்தையும் மத்திக்கு வழங்கிவிட்டு தங்களை மத்திய அரசின்அலுவலகத்திற்குஅனுப்பி யுள்ளனர் எனவும், தங்களின் தொண்டராசிரியர்கள் தெரிவுகள், நேர்முகத் தேர்வுகள் எல்லாம் மாகாண சபையின் அதிகாரத் திற்கு உட்பட்டவை என்றும் பத்தர முல்லைக்குச் சென்ற தொண் டராசிரியர்கள் கவலை தெரிவித் துள்ளனர். (ஐ)

35 வருடங்களின் பின்னர் நாடாளுமன்று புனரமைப்பு

கொழும்பு, ஏப்.19

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியை 35 வருடங்களுக்குப் பின் னர் 100 கோடி ரூபா செலவில் புனரமைப்புச் செய்யத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதற்குச் செலவாகும் பணத்தைக் கோரும் அமைச்சரவைப் பத் திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் தம்மிக திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் கூரை, வாயிற் கதவுகள், மலசல கூடங்கள், நாடாளுமன்றச் சபை , நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங் கள் என்பன புனரமைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கக்கப்பட்டுள்ளது. (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாமல் குழம்பி நிற்கின் றனர் என்பதும் உண்மையே.

'உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால் உன் நிழலும் கூட மிதிக்கும்' என்ற கண்ண தாசன் அடிக்கு ஒப்ப, அரசுத் தரப்பில் அமைச்சராக இருக் கும் மனோ கணேசனும் கூட நையாண்டிக் கேள்வி கேட்கும் நிலைமை இன்று சம்பந்தன் ஐயாவுக்கு.

சரியோ, பிழையோ புதிய அமைப்பு உருவாக்கம் தொடர் பில் இதுவரை நகர்த்தப்பட்ட விட யங்கள் மிகக் காத்திரமானவை. இந்த முயற்சியில் நேர்மைத் திறத்துடனும், பற்றுறுதியுடனும், விட்டுக் கொடுப்புடனும் தமிழர் தரப்பு பங்குபற்றியது, தொடர்ந்து அதே ஈடுபாட்டுடன் அதை முன் னெடுத்து, வெற்றிகரமாக நகர்த்துவதற்கும் அது காத்துத் தயாராக இருக்கின்றது என்ற செய்தியை அனைத்துலகச் சமூகத்துக்கும் இந்த நாட்டுக்கும் நம்பிக்கையுடன் உணர்த்து வதில் கூட்டமைப்புத் தலைமை வெற்றிபெற்றிருக்கின்றதுஎன்றே கூற வேண்டும்.

தனது மக்களுக்கு மத்தியில் – தமிழ்த் தரப்புகளுக்கு இடை யில் – இந்த முயற்சியில் இறுதி வெற்றியை ஈட்டாமையால் கூட்ட மைப்புத் தலைமை பலத்த எதிர்வினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதுவும் தவிர்க்க முடியாததே.

ஆனால், இறுதி வெற்றி கிட்டாவிட்டாலும், சர்வதேச சமூ கத்துக்கு எதை எடுத்துக் காட்ட வேண்டுமோ அதனை எடுத்துக் காட்டுவதில் கூட்டமைப்புத் தலைமை கணிசமாகவே சாதித் திருக்கின்றது. அதை மறுக்க முடியாது.

இனி என்ன? – என்பதே கேள்வி. புதிய அரசமைப்பு உரு வாக்க முயற்சியை முன்னகர்த்த முடியாத நிலைமையில் அடுத்த – எஞ்சிய– இரண்டரை ஆண்டு களும் சம்பந்தன் வெறுமனே எதிர்க் கட்சித் தலைவர் பதவியை அலங்கரித்து விட்டுப் போகப் போகின்றாரா அல்லது அவரிடம் இந்த முயற்சி தோற்ற மையால் மாற்றுத் திட்டம் – பிளான் 'பி' – ஏதும் கைவசம் இருக்கின்றதா, அதனைக் கைக் கொள்ளப் போகின்றாரா என்பதே இன்றைய கேள்வி யாகும்.

''இந்த அரசமைப்பு உரு வாக்கத் திட்டம்தான் உங்களுக் குப் பிடிக்கவில்லை என்றால் சரிவிட்டுவிடுவோம். 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா பண்டார நாயக்கா அரசு கொண்டு வந்த – தீர்வுத் திட்டம் அடங்கிய – அர சமைப்புத்திருத்தயோசனையைக் கையிலெடுப்போம் வாருங்கள். அதனை அப்போது ரணில் விக்கிரமசிங்கவும்அவரின்ஐ.தே. கவினருமேஎதிர்த்தனர். அவர்கள் இப்போது அதனை ஆதரிக்கத் தயாராக இருக்கின்றனர். ஆகவே அதனையாவது செய்வதற்கு முன் வாருங்கள்! '' – என்று அழைப்பு விடுப் பதற்கு சம்பந் தன் தயராகின்றார் என்று அறிய வந்தது.

ஆனால், அதுவும் கூடச் சரிவரப்போவதில்லை. ஏற்கனவே இப் பந்தியில் நான் குறிப்பிட்டபடி A lot of water has flowed under the bridge. சந்தி ரிகாவின் தீர்வு யோசனை முன் னெடுக்கப்பட்டு இந்தப் பதி னெட்டு வருடங்களில் பல விடயங்கள் ஒப்பேறி முடிந்து விட்டன. கடந்து போய்விட்டன, நடந்து விட்டன. மீண்டும் சந் திரிகா காலத்து யோசனை இங்கு இப்போது பரிசீலனைக்குக் கூட எடுக்கப்படப்போவதில்லை. அது தான் இப்போது தென்னிலங்கை அரசியல் நிலைமை.

அப்படியானால் சம்பந்தன் இனிஎன்னசெய்யப்போகின்றார்? தந்தை செல்வாவின் தீர்க்கத் தரிசன வார்த்தைகளைச் சம்பந் தனின்மொழியில்கூறுவதானால் *'திருகோணமலை பத்திரகாளி அம்மன்தான் இனித் தமிழர் களைக் காப்பற்ற வேண்டும்!'*

- மின்னல் -

யாழ். பல்கலை விஞ்ஞான பீட பரீட்சைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பரீட்சைகள் வரும் 23ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகும் என பல் கலைக்கழகப் பதிவாளர் அறி வித்துள்ளார்.

விஞ்ஞான பீடத்தின் கற்கை கள் எதிர்வரும் மே 11ஆம் திகதி ஆரம்பமாகும்.

புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு எதிர் வரும் ஜூன் 6ஆம் திகதி நடை பெறும் என்றும் பதிவாளர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீட இராமநாதன் நுண்கலைத் துறை மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளும் எதிர்வரும் 23ஆம் திகதி திங் கட்கிழமை மீள ஆரம்பமாகும்.

4ஆம் வருட மாணவர்களுக் கான கலைமாணிப் பரீட்சைகள் எதிர்வரும் 25ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளன. அத்துடன், கலைப்பீட முதலாம் வருடமாணவர்களுக்கானபரீட்சை கள் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

புதுமுக மாணவர்களுக் கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் மே 30ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

மைத்திரியை வலுப்படுத்தவே அரசில் இருந்து விலகினோம்!

கூறுகிறார் அமைச்சர் டிலான்

கொழும்பு, ஏப்.19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை வலுப்படுத்தவே 16 பேர் கொண்ட தமது குழுவினர் அரசாங்கத்தில் இருந்துவிலகினர்என முன்னாள் ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தவிர்க்க முடியாத காரணத்தி னால், ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவில் இணைந்து கொண் டவர்களையும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோடு இணைத்து கொள்ள எதிர்பார்த் துள்ளதாகவும் அவர் கூறினார்.

தமது தரப்பினர் எதிரணியில் அமர்ந்த போதிலும் கூட்டு எதிர்க் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை எனவும் தம்முடன் 25 பேர் எதிரணி வரிசையில் அமர்வார்கள் எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (ஐ)

விடுவிக்கப்பட்ட பகுதியில் மோட்டார் குண்டுகள் மீட்பு

வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கட்டு வன் சந்திக்கு அருகில் உள்ள வீட்டுக் கிணற் றடியில் இருந்து நேற்று மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டன.

கடந்த 28 வருட காலமாக இராணுவத் தினரின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி.வடக்கில் 683 ஏக்கர் நிலப்பரப்பு கடந்த 13ஆம் திகதி விடுவிக்கப்பட்டது. அக் காணிகள் உரிமையாளர்களி டம் மீளக் கையளிக்கப்பட்டன.

இவ்வாறு கையளிக்கப்பட்ட கட்டுவான் சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றின் கிணற்றடியில் உள்ள தண்ணீர்த் தொட்டிக்குள் மோட் டார் குண்டுகள் காணப்பட்டன. (ஐ)

மாந்தை...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வித் தவிசாளராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யின் ராஜ்குமார் சிந்துஜன் நியமிக்கப்பட் டுள்ளார்.

13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன் தலைமையில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்றது.

இதன்போது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி, ஈ.பி.டி.பி. ஆகியற்றின் உதவியுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி யுள்ளது.

மாந்தை கிழக்கில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்தே அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் போட்டியிட்டிருந்தது. அந்த வகையில், அந்தக் கட்சி யில் போட்டியிட்டிருந்த தயானந் தனுக்கு அகில இலங்கை மக் கள் காங்கிரஸின் 4 வாக்குக ளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் 2 வாக்குகளும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரு வாக்கும் கிடைத்தன.

அவரை எதிர்த்துப் போட்டி யிட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்த சி.செந்தூ ரன் 6 வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்தார்.

அத்தோடு, பிரதித் தவிசா ளராகப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஆர்.சிந்துஜன் 7 வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார். இவருக்கு ஆதரவாக அகில இலங்கை மக் கள் காங்கிரஸின் 4 வாக்குக ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 வாக்குகளும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரு வாக்கும் கிடைத்தன.

மாந்தை கிழக்குப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆறு உறுப் பினர்களைக் கொண்டுள்ளது. இந்நிலையில், கூட்டமைப்பே ஆட்சியமைக்குமெனத் தகவல் கள் வெளியிடப்பட்டிருந்த நிலை யில் அதன் ஆட்சியை ஐ.தே.க. கைப்பற்றியுள்ளது. (ஐ)

ஜனநாயகத்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

எம்.பற்றிக்டிறஞ்சன் தலைமை யில் நடைபெற்றது.

இதன்போது கூட்டமைப்பின் சார்பில் அமுதலிங்கமும், சுதந் திரக் கட்சியின் சார்பில் எஸ். நடே சனும் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டனர். இதன்போது கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட அமுதலிங்கத்துக்கு அவரது கட்சியின் 6 வாக்குகளும் ஜன நாயகத் தமிழரசுக் கட்சியின் ஒரு வாக்குமாக 7 வாக்குகள் கிடைத் தன. சு.க.சார்பில் போட்டியிட்ட நடேசனுக்கு ஐ.தே.க, ஈ.பி.டி.பி, சு.க. ஆகியவற்றின் 6 வாக்கு களும் கிடைத்தன. இதன் மூலம் கூட்டமைப்பின் அமுதலிங்கம் தவிசாளராகத் தெரிவானார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படும் சாத்தியம்?

நாடாளுமன்றத்தை தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி முடக்கியுள்ள ஜனாதிபதி அதன் கூட்டத் தொடரை அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைத்திருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில் தென்னிலங்கையில் புதிய அரசியல் போக்குக்கான அத்தியாயம் ஆரம்பமாகத் தொடங்கியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த தடவை தாம் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புகள் அரசியல் ரீதியாக அருகி வருகின்றமையை உணர்ந்துள்ள ஜனாதிபதி புதிய அரசியல் வியூகங்களை வகுக்கத் தொடங்கியுள்ளார் என அவருக்கு எதிர்த்தரப்பில் இருக்கும் அரசியல் தலைமைகள் கருதுகின்றன.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷவை தாமே முன்னின்று இறக்குவதன் மூலம் எதிர்காலத்தில் தமக்குச் சாதகமான அரசியல் சூழலைப் பேணுவதற்கான வாய்ப்புகளைத் தேடுகிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்கின்றன அந்த அரசியல் தலைமைகள்.

ஜனாதிபதி பதவியைத் தாம் தொடர்ந்து தக்க வைத்திருப்பது இயலாது என்ற யதார்த்தம் புரியும்போது, தனக்குச் சாதகமான ஒருவரை களமிறக்கி, வெல்ல வைப்பது நல்ல தந்திரம் என்று அவர் கருதுகின்றார் போலும்.

கோட்டாபயவைக் களமிறக்கினால் அதற்குத் தாம் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சியும், மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகிக்கும் கூட்டு எதிரணியும் மறுப்போ, ஆட்சேபமோ தெரிவிக்க முடியாது, இணங்கியேயாக வேண்டும் என்று கணக்கிடுகின்றார் மைத்திரிபால.

ஆனால், இன்றைய சூழலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தெரிவாக ஜனாதிபத் தேர்தலில் கோட்டாபய களமிறங்குகின்றமை, அவர் தமது சகோதரராக இருந்தாலும் எதிர்காலத்தில் தமக்கும் தமது குடும்பத்துக்கும் அரசியல் சூனியத்தை ஏற்படுத்தி விடும் என அஞ்சும் மஹிந்த ராஜபக்ஷ, அதனால், இந்தத் தந்திரோபாய நகர்வை அடியோடு விரும்பவில்லை என்றும் தெரிகின்றது.

சு.கவினதும், கூட்டு எதிரணியினதும் பொதுவேட்பாளராக கோட்டாபய அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகின்றமை, 1996 இல் தமது கட்சியிடமிருந்து பறிபோன ஜனாதிபதிப் பதவியை மேலும் 5 ஆண்டுகளுக்கு – 2025 வரை – கிட்டாமல் செய்துவிடும் என்ற யதார்த்தத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் உணர்ந்துள்ளது.

இதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை தொடர்கின்றமையைத் தொடர்ந்து எதிர்க்கின்றது மற்றொரு பிரதான எதிர்க் கட்சியான ஜே.வி.பி.

மேலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக வலியுறுத்தாவிட்டாலும் கூட, அந்தப் பதவி கோட்டாபய ராஜபக்ஷ பேன்ற ஒருவரிடம் செல்வது சிறுபான்மையினரான தமிழருக்குப் பேராபத்தானது என்று கருதுகின்றது.

இவ்வாறு நிறவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு கோட்டபாய ராஜபக்ஷ வருகின்றமையை ஆபத்தான விடயமாகக் கருதி, அதனை அடியோடு எதிர்க்கும் இந்த அரசியல் தரப்புகள், அத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தடுக்கும் முன்னேற்பாடாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையே அதற்கு முன்பாக அடியோடு ஒழித்து விட்டால் என்ன என்று கருதுகின்றன என்றும் தெரிகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படுகின்றமையை கூட்டு எதிரணியும் ஒற்றைக் காலில் நின்று வரவேற்பதாகக் கூறப்படுகின்றது. அந்த முறைமை நீக்கப்பட்டால் அரசினதும், நாட்டினதும் தலைவராக மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ எழுச்சி பெறுவதற்கான அரசியல் தடை – அல்லது கட்டுப்பாடு – முற்றாக நீங்கிவிடும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் இருக்க முடியாது என்ற கட்டுப்பாடே அவர் நாட்டின் தலைவராக மீண்டும் வரமுடியாமைக்குக் காரணமாகும். அந்த ஆட்சி முறைமையே நீக்கி விட்டால், அந்தக் கட்டுப்பாடும் விலக, பிரதமர் என்ற பதவியோடு அவர் மீளவும் நாட்டின் தலைவராக வர முடியும் எனக் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இன்றைய சூழலில், தத்தமது கட்சிகளின் நலனுக்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் திட்டத்துக்கு ஐ.தே.கட்சி, கூட்டு எதிரணி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன ஆதரவளிக்கவும், அதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று அதை நடைமுறைப்படுத்தவும் வாய்ப்புகள் பெருகி வருகின்றன என கொழும்பு அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கக் கோரும் விடயத்தை ஜே.வி.பி. தரப்பு தனது எம்.பி. ஒருவர் மூலம் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தயாராகியுள்ளது.

இந்த முயற்சிக்கு கூட்டு எதிரணி, ஐ.தே.கட்சி, கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆசீர்வாதமும் ஆதரவும் கிட்டும் என்ற சமிக்ஞை வெளிவந்திருந்தால், முடக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூடியதும் இந்த விவகாரம் அரசியல் ரீதியாக விஸ்வரூபம் எடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதுதான் காலத்தின் கட்டாயம் எனில், அதைச் செய்வதே ஒரே மார்க்கமாக இருக்கமுடியும்.

முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:–

மானுடத்தின் மதிப்பினைப் பேணிக்காப்பதில் அக்கறை கொண்டவர்களாக, நாகரீமாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும்உலகசமூகங்களின் மனச்சாட்சிக் கதவுகளை இறுக்கி மூடி வைத்தபடி, அவசர அவசரமாக இருபத்தோராம் நூற்றாண்டில் எல்லோர் முன்னிலையிலும் நடந்தேறிய, மறைக்கவும், மறக்கவும் முடியாத, மிகவும் கோரமாக நடாத்தி முடிக்கப்பட்ட தமிழர்களுக்கெதிரான மாபெரும் மனிதப் பேரவலம்தான் மே18 முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை!

இப்பேரவலத்தை நாம் எல்லோரும் தமிழர்களாக, வரலாற்று வழித்தடத்தில் சுமந்து வந்த அத்தனை அறவழி முறைகளிலிருந்தும் வழித்தடம் மாறாமல், உலகின் முன்னால் நிமிர்ந்து நின்று நீதி கேட்கும் அத்தனை உரிமைகளும் தமிழர்களாகிய எமக்குண்டு.

நாங்கள் நாங்களாக, தமிழர்களாக இருக்கும் வரையில் தான் எமது இனவிடுதலையின் பயணம் வீறுகொண்டெழும், வியாபகம் பெறும். இல்லையேல் கால ஓட்டத்தில் வழித்தடம் மாறி, யார் யாரெல்லாம் எம்மை அழிக்க நினைத்தார்களோ அவர்களின் பாதையில் பங்காளிகளாகவும் கூட மாற நேரிடும்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவுதினமென்பது தமிழர்களின் ஒட்டுமொத்த துயரங்களாலும், தோல்விகளாலும் துவண்டுபோகும் நிகழ்வல்ல..! மாறாக தமிழர்களின் மீளெழுச்சியைக் கட்டியங்கூறி நிற்கும் தார்மீக வடிவமாக, காலம்கால மாய்த் தொடர்ந்து வரும் அத்தனை வரலாற்றின் அடையாளங்களோடும் தமிழ்த்தேசியம் புத்துயிர்பெறுகின்ற பேரெழுச்சி நிகழ்வாக அமைய வேண்டும்!

எம் தாய் நிலத்திலாயினும், புலம்பெயர்ந்த தேசங்களிலாயினும், தமிழ்த்தேசியம் நோக்கிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் தமிழர் அமைப்புக்கள் தங்களது செயற்பாடுகளுக்கேற்ப முள்ளிவாய்க்கால் நினைவுதினம் போன்ற தமிழ்த்தேசிய நினைவெழுச்சி நிகழ்வினை அதன் அடையாளங்களிலிருந்தும் வேறுபடுத்துகின்ற பிரத்தியேக நிகழ்வாக ஒருபோதும் கடைப்பிடிக்க முடியாது எனவும், ஒன்றாக ஓரிடத்தில் அந்தந்த நாடுகள் தழுவி தமிழர்களின் ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய மக்கள் பேரெழுச்சியாக எழுச்சிகொள்ள வேண்டும் எனும் தமிழ்மக்களின் பார்வையும், அவர்களது அபிலாசையும் புறக்கணிக்கமுடியாத சூழமைவாக மிகவும் வலுப்பெற்றுள்ளது.

இவ்விடயத்தினைப் பெரிதும் கருத்திற்கொண்டு இதுபற்றிய நேரடியான, நேர்மையான , ஆக்கபூர்வமான கலந்தாலோசனைகளோடு, இதனைச் செயற்படுத்த முனையுமாறு தமிழர்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் தம்மை ஈடுபடுத்தியிருக்கும் அனைத்து அரசியல் மற்றும் பொது அமைப்புக்களிடமும், எம்மினத்தின் எதிர் காலத் தூண்களான இளைய மாணவ சமுதாயம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது. – என்றுள்ளது. (ஐ)

மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுடன் பேச்சு நடத்தியுள்ளார் என அந்த அரசியல் தரப்புத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அரசில் அங்கம் வகித்து கொண்டு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்த போதிலும் அவர் சுய விருப்பத்தின் பேரில் வாக்களிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இறுதி நேரத்திலேயே எஸ்.பி. திஸாநாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்.

தன்னுடன் இணைந்து வாக்களித்த 15 பேரின் கோரிக்கை மற்றும் ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளார் எனக் கூறப்பட்டதன் காரணமாகவே எஸ்.பி. திஸாநாயக்க, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார் எனக் தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா இல்லையா என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நடந்த பேச்சுக்களில், தொடர்ந்தும் தேசிய அரசில் அங்கம் வகிக்கும் வகையில் செயற்படவேண்டும் என எஸ்.பி. தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் அரசில் இருந்து விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் அழுத்தங்களைக் கொடுத்தபோது, ஐக்கிய தேசியக்கட்சி அழுத்தங் களைக் கொடுத்தாலும் ஜனாதிபதியுடன் தொடர்ந்தும் அரசில் அங்கம் வகிக்கவேண்டும் என எஸ்.பி. திஸாநாயக்க வலியுறுத்தினார் என அரசியல் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ)

எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது டுவிட்டர் கணக்கில், சிங்களத் தலைவர்கள் மீது கடுமையான விமர்சனங்களை வெளிப் படுத்தி, வெளியிட்ட பதிவிலேயே, அவர் இந்தக் கருத்தை முன் வைத்துள்ளார்.

தற்போதைய அரசியல் சந்தடிகளில் காணாமற் போயுள்ள புதிய அரசமைப்புப் பணியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும், பிரதமர் தலைமையிலான வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்டவேண்டும் என்று இரா.சம்பந்தனிடம், கடந்த வாரம் ஒரு நிகழ்வில் சந்தித்த போது, நான் சொல்ல, அவரும் 'ஓம்..ஓம்..தம்பி' என்று பல மாகத் தலையாட்டி உடன்பட்டார் என்றும் மனோ கணேசன் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

உண்மையில் அப்போது அவருக்கு நான் சொல்ல மறந்தது. ஐ.தே.க. – சு.க. கட்சிகளின் அக்கப்போர் எங்கள் பிரச்சினை அல்ல. நமது முன்னுரிமைப் பட்டியலில் முதலிடம் இனப் பிரச்சினை. புதிய அரசமைப்பு இல்லையென்றால், இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை. இனப் பிரச்சினைக்குத் தீர்வில்லை யென்றால், அந்தப் பதவி சும்மா ஒரு பக்க வாத்தியம்தான். ஆகவே புது அரசமைப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியாவிட்டால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விடுங்கள். அப்புறமும் அது தொடர்ந்தால் அது பக்க வாத்திய ஊதல்தான் – எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழக் கோரிக்கையை, இரா. சம்பந்தன் கைவிட்டமையை, இலங்கையின் தெற்குப் பகுதி புரிந்து கொள்ளவில்லை என்பதோடு, அதை மதிக்கவுமில்லை எனத் தெரிகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது வெளிவிவகார அமைச்சராக பதவி வகிக்கும் திலக் மாரப்பன, அந்த பதவியில் இருந்து விலக இணக்கம் தெரிவிக்கவில்லை.

அவ்வாறானபின்னணியில், வெளிவிவகார அமைச்சராக பதவியேற்பதன் மூலம் கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறியே விஜேதாச அந்த யோசனையை நிராகரித்துள்ளார். (ஐ)

விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைச்சர் விக்கினேஸ்வரன் இந்தியாவுக்கு புறப்பட முன்னர் தனது கேள்வி பதிலில், தமிழ் மக்கள் விரும்பும் பட்சத்தில் தான் மீண்டும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருக்கிறார் எனக் கூறியிருந்தார். அது ஒரு கட்சியினூடாக வருவதனையும் விட ஒரு ஜக்கிய முன்னணியினூடாகவோ அல்லது வேறு ஏதாவதொரு வகையிலோ வரவேண்டும் என்ற அடிப்படையில் அவரது கருத்துக்கள் ஊடகங்களில் வெளிவந்தன.

அவ்வாறானதொரு சூழலில் எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை – உரிமைகளை வெற்றி கொள்ள வேண்டுமாக இருந்தால் எமக்கு ஓர் இறுக்கமான கட்டமைப்பு தேவை.

ஏற்கனவே தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பும் மக்கள் கொடுத்த ஆணையிலிருந்து விலகிச் சென்றிருக்கின்றன. அதன் காரணமாகக் கடந்த உள்ளூராட்சிச்சபைத்தேர்தலில் அவர்கள் பலத்த அடி வாங்கியிருக்கின்றனர். பல ஆயிரக் கணக்கான வாக்குகளை அவர்கள் இழந்தும் இருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு சூழ் நிலையில் தமிழ் மக்கள் நீண்ட காலப் போராட்டத்தின் பின்னர் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், அவர்களது உரிமைகளை – அபிலாகைளை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்ல நம்பகத் தன்மை வாய்ந்த கட்சியொன்று முக்கியம். அந்தக் கட்சியென்ற அடிப்படையில் முதல்வர்புதியகட்சியொன்றைத் தொடங்க இருக்கிறாரா அல்லது கொள்கையை ஏற்றுக் கொண்ட ஜக்கிய முன்னணியியை உருவாக்க விரும்புகிறாரா என்பது தொடர்பில் தெளிவில்லாத சூழ் நிலை உள்ளது.

அவ்வாறு சரியானதொரு ஜக்கிய முன்னணி உருவாகும் பட்சத்தில், அதற்கான யாப்பு, சரியான கொள்கைத் திட்டமிடல்கள் எல்லாம் சரியான முறையில் உருவாகும் பட்சத்தில், ஈ.பி.ஆர்.எல்.எவ். இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றது.

சரியான கொள்கைகளை முதலமைச்சர் வகுக்கக் கூடிய சூழ்நிலை வருமாக இருந்தால் நிச்சயமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணிஅவருடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றது. – என்றார். (ஐ–7)

நாளை

20.04.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : மிருகசீரிடம் மு.இ. 11.41 வரை
திதி : பஞ்சமி மு.இ. 11.27 வரை
சுபநேரம் : 06.02 – 07.32 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02 வரை

ஏப் 22 ஆம் திகதி முதல் நடைமுறையில் ஜி.எஸ்.பி!

கொழும்பு, ஏப். 19

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு அமெரிக்காவால் வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி வரிச் சலுகை எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனக் கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் ரிஷாத் பதியுத் தீன் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கையொப்பமிட்டிருந்தார். அதன்படி இந்த வரிச் சலுகை இம்மாதம் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

ஐக்கிய அமெரிக்காவின் முன்னுரிமைப்படுத்தலுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (ஜி.எஸ்.பி) 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகிய நிலையில் அதன் மீள் அங்கீகாரத்தை

அமைச்சர் ரிஷாத் பதியுத்தீன் தெரிவிப்பு

அமெரிக்கக் காங்கிரஸ் வழங்க வில்லை.

இதன் விளைவாக ஜி.எஸ்.பி கடந்த 2017ஆம் ஆண்டுடன் காலாவதியாகியதால், இலங்கை மற்றும் ஜி.எஸ்.பி சலுகை பெறும் நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இருந்து அமெரிக்காவுக்கு மேற் கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கு ஜனவரி 1, 2018 முதல் அமுலுக்கு வரும் வகையில் முன்னுரிமையற்ற வரிகள் விதிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் மீண்டும் அந்த வரிச் சலுகையை வழங்குவதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனுமதி வழங்கியுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

90 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி!

கொழும்பு, ஏப். 19

இந்த வருடத்தில் 90 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு உற்பத்தியை எதிர் பார்க்கிறோம் என இலங்கை உப்பு கம்பனியின் தலைவர் ஜயுப்கான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்-

நாட்டின் வருடாந்த உப்புத் தேவை ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன்களாகும். இவற்றில் 70 ஆயிரம் மெற்றிக் தொன்களை இந்தக் கம்பனி உற்பத்தி செய்கிறது.

மேலும், 20 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை தனியார் நிறுவனம் ஒன்று உற்பத்தி செய்கின்றது. எதிர்காலத்தில் உப்பு இறக்குமதியை நிறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றார்.

மழையுடன் கூடிய காலநிலை இன்றுடன் குறைவடையலாம்!

கொழும்பு, ஏப். 19

தற்பொழுது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை இன்றுடன் குறைவடையக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று நண்பகல் 12 மணிக்கு திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

மேற்கு சப்கமுவ மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

மேற்கு மற்றும் தெற்கு கடற் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளைகளில் மழை பெய்யக் கூடும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டம் நிலவக் கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது இந்தப் பகுதிகளில் தற்காலிகமாகக் கடும்காற்று வீசக் கூடும். இடிமின்னல் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு திணைக்களம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளது.

பண்டிகை கால பஸ் சேவை; 24 ஆம் திகதி வரை நீடிப்பு!

கொழும்பு, ஏப். 19

பண்டிகைக் காலப்பகுதியில் தமது சொந்த இடங்களுக்குச் சென்ற பொது மக்களின் வசதிக்காக முன்னெடுக் கப்பட்ட விசேட பஸ் சேவைகள் எதிர் வரும் 24 ஆம் திகதி வரையில் நீடிக் கப்பட்டுள்ளன என இலங்கைப் போக்கு வரத்து சபை தெரிவித்துள்ளது.

இதற்காக சுமார் 15ஆயிரம் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சொந்த இடங்களுக்குச் சென்ற பொது மக்கள் தற்போது மீண்டும் தலை நகரம் உள்ளிட்ட நகரங்களுக்கு வர ஆரம் பித்துள்ளனர்.

நுவரெலியா, கண்டி, குருநாகல், அங்குராங்கெத்த, காலி, மாத்தறை உள்ளிட்ட கிராமப் பிரதேசங்கள் பலவற் றிற்கு மேலதிக பஸ் சேவைகள் இடம் பெற்று வருகின்றன.

அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களுக்கு வருகை தரும், பொது மக்களுக்காக சம்பந்தப்பட்ட வீதிகளில் அதாவது கொழும்பு உள்ளிட்ட பகுதிகளுக்கு வருகை தரும் மக்களுக்காக சம்பந்தப்பட்ட வீதிகளில் பஸ் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் 30 நிமிடங்களுக்கு

ஒருமுறை சேவையில் ஈடுப்படுத்தப் பட்ட பஸ்கள் தற்போது 15 நிமிடங் களுக்கு ஒருமுறை சேவையில் ஈடுப் படுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் தேவைக்கு அமை வாகப் பிரதேசம் மற்றும் தூர இடங்க ளுக்கான போக்குவரத்துச் சேவை இடம்பெற்றுவருகின்றனஎன இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தூர இடங்களுக்கான பஸ் சேவை யில் அறவிடப்படும் கட்டணத் தொகை யில்பிரச்சினை இருக்குமாயின் அவை தொடர்பாக 1955 என்ற தொலை பேசியினூடாக அறிவிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மின்தடை

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **வவுனியாப் பிரதேசத்தில்** - பட்டானிசூரியில் இருந்து நெளுக்குளம் ஊடாக இராஜேந்திரகுளம் வரை, ஒமேகா லைன், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்-

மன்னார்ப்பிரதேசத்தில்- முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுகுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை சிலாவத்துரை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், செம்மண் தீவு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மலர் செய்கையை விரிவுபடுத்த திட்டம்!

கொழும்பு, ஏப். 19

மலர்ச் செய்கையை விரிவுபடுத்தும் ஒரு செயற்றிட்டத்தைத் தாவரவியல் பூங்கா திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

இந்த வருடம் இதற்காக ஏழு கோடி ரூபா செலவிடப்படும்.

மலர்ச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் மலர் ஏற்றுமதி கிராமம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும். நாட்டில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும்வகையில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழாவும் பாராம்பரிய பொருள்களின் கண்காட்சியும்!

முல்லைத்தீவு, ஏப். 19

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் 5திணைக்களம் மற்றும் கலாசார அலுவலல்கள் திணைக்களம் ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்டப் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாவட்டப் பண்பாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு ஏ 9 வீதியில் அமைந்துள்ள மாவட்ட செயலகப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வை முன்னிட்டு பாரம் பரிய பொருள்கள், பாரம்பரிய உணவுகள், கைவினைப் பொருள்கள், மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் நூல்கள் என்பவற்றின் கண்காட்சியும் விற்பனையும் இன்று காலை 9.30 மணிமுதல் இந்தப் பயிற்சி நிலையத்தில் இடம் பெறும் என்றும் மாவட்ட பண்பாட்டு பேரவை அறிவித்துள்ளது.

(க-70)

நீதிச் சேவை அதிகாரிகளாக 19 சட்டத்தரணிகள் நியமனம்

ஒருவர்கூடத் தமிழரில்லை

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் 15 நீதிவான்களும் 4 தொழில் நியாய சபைத் தலை வர்களும் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்களில் ஒரு வர் கூடத் தமிழர் இல்லை.

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் நீதிச் சேவையின் 2 ஆம்வகுப்பின்முதலாம்தரத்துக்கு நீதிவான்களாக 15 சட்டத் தரணி கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் களின் நியமனத் திகதி எதிர்வரும் மே முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வருகிறது.

அத்துடன், நீதிச் சேவையின் முதலாம் தரத்துக்குரிய தொழில் நியாயச்சபையின்தலைவர்களாக 4 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பானவர்த்தமானிஅறி விப்பைநீதிச்சேவைகள்ஆணைக் குழுவின் செயலாளர் எச். எஸ். சோமரத்ன வெளியிட்டுள்ளார்.

புதிதாக நியமனம் பெற்ற நீதிச் சேவைகள் அதிகாரிகள் 19 பேரில் தமிழர் ஒருவர்கூட தெரிவு செய் யப்படவில்லை. இந்தசேவைக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை யில் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் தோற்றியி ருந்தனர். (ஐ)

தினசரி ராசி பலன் (19.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரிரை 6 ஆம் நாள் வியாழக்கிழமை சதுர்த்தித் திதி. இரவு 11.08 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: ரோகினி இரவு 10.51 மணி வரை. பின்னர் மிருகசீரிடம். மரணயோகம் முழுவதும்.

ராகுகாலம் - பகல் 1.42 மணி முதல் 3.14 மணி வரை

சுபநேரம் - காலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை

இன்று சதுர்த்தி விரதம்.

திவசம் செய்ய வேண்டிய திதி - சித்திரை மாத வளர்பிறை சதுர்த்தி.

பிறந்த நட்சத்திர வழிபாடு - ரோகினி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

மேஷம்

ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக் கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். தடைப்பட்ட காரியங் கள் சுமுகமாக முடிப்பார்கள். சகோதரரின் ஆதரவு கிட்டும். ஆன்மிக வாதிகளைச் சந்தித்து மகிழ்வார்கள்.

ரிஷபம்

அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமடையும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதகரிக்கும். பிள்ளைக ளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வார்கள். உடன் பிறந்த வர்களின் ஆசைகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

மிதுனம்

சஞ்சலமான நாள். பணம் பற்றாக் குறையாக இருக்கும். உடல் நலம் பாதிப்புறும். உத்தியோகத்தில் சக ஊழியர் களின் கருத்து வேறுபாடுகள் வந்து போகும். எடுத்த வேலையை முடிப்பதற்கு காரியத் தடைகள் வந்து போகும்.

கடகம்

உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும் பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். தாய் வழி உறவி னர்களின் ஆதரவு கிடைக்கும். கோபமாய்ப் பிரிந்த உறவி னர்கள் வலிய வந்து சேர்வார்கள்.

சிம்மம்

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு இருந்தா லும் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். குடும்பத்தில் வாக்கு வாதங்கள் வந்து போகும். உடன் பிறந்தவர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள்.

கன்னி

சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். பெரியவர்கள் பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். ஆடை, ஆபரணம் சேரும்.

துலாம்

சலனம் மிகுந்த நாள். பணத் தட்டுப்பாடு இருக்கும். குடும் பத்தில் உட்பூசல்கள் காணப்படும். பேச்சில் நிதானம் தேவை. வேலைப் பளு அதிகரிப்பதால் சோர்வாகக் காணப்படுவார்கள். மனக் குழப்பம் உண்டாகும்.

விருச்சிகம்

சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு ஏற்ற மும், இறக்கமுமாக இருக்கும். எடுக்கும் காரியங்கள் தடை, தாமதம் ஆகும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர் கொண்டு வெற்றி காண்பார்கள்.

தனுசு

நன்மையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பிள்ளைகளின் நடவடிக்கையால் மகிழ்ச்சி உண்டாகும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

மகரம்

யோகமான நாள். தனலாபம் பெருகும். நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேறும். சொந்த பந்தங்களிடையே நிலவி வந்த கசப்புணர்வு நீங்கும். சகோதரர்களால் மகிழ்ச்சி நிலவும்.

கும்பம்

துயரமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் உண்டாகும். இவர் களைச் சுற்றி இருப்பவர்களால் செலவுகள் கூடும். உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை.

மீனம்

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகளால் கடன் படும் நிலை உண்டாகும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை.

சந்திராஷ்டம நாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகாரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

ஆனந்த சுதாகரனின் குழந்தைகளை சந்திப்பதற்காக யாழ். வந்தார் கோரளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்!

அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் குழந்தைகளை சந்திப்பதற்காகவாழைச்சேனை, கோரளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க. கமலநேசன் யாழ். வந்துள்ளார்.

ஆனந்த சுதாகரனின் மனைவி யோகராணியின் 31 ஆம் நாள் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அவர், யோகராணி யின் ஆத்ம சாந்திக்காக பிரார்த் தித்துள்ளமையுடன், இரு குழந் தைகளுடன் உரையாடி ஆறு தல் கூறியுள்ளார்.

இதன்போது கருத்து தெரி வித்த வாழைச்சேனை, கோர ளைப்பற்று பிரதேச சபை உறுப் பினர்-

நாட்டிற்கு ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை கொண்டுவந்ததமிழ்மக்களுக்கு நன்றிக்கடனாக ஆனந்த சுதாக ரனை விடுதலை செய்வார்கள் என்று பார்த்த மக்களுக்கு



ஏமாற் ணறமே கிட்டியுள்ளது

அரசியல்கைதியானஆனந்த சுதாகரனை புது வருடத்திற்கு முன்பாக பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வேன் எனக் கூறிய ஜனாதிபதி, ஏன் இன்னும் மௌனம் கொண்டு விடுதலைசெய்யாமல்உள்ளார்.

மனைவியின் மரணச்சடங் கிற்கு ஆனந்த சுதாகரன் சென்ற வேளை இரண்டு குழந்தைகள் கட்டி அனைத்து கதறியமை யும், பெண் குழந்தை தகப்பனு டன் பஸ்ஸில் ஏறியமையை யும் நாங்கள் பார்த்து மிகவும் வேதனையடைந்தோம்.

இதனை கருத்தில் கொண்டு அரசியல் கைதியான ஆனந்த சுதாகரன் விடுதலைக்காக சிறு பான்மைமக்கள் ஒன்றிணைந்து கையெழுத்து திரட்டி ஜனாதிப திக்கு வழங்கினோம்.

இந்த இரண்டு குழந்தைக ளும் தங்களது பாட்டியுடன் ஜனாதிபதியை சந்தித்தபோது சித்திரை புதுவருடத்திற்கு முன் பாக அவரை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வேன் எனக்கூறியஜனாதிபதிதற்போது பச்சிளம் குழந்தைகளை ஏமாற்றியமை மிகவும் வேத னையை தருகின்றது.

அத்துடன், இந்த விடயத் தால் ஒட்டுமொத்தமாக சிறு பான்மை சமூகத்தினரும் ஏமாற் றம் அடைந்துள்ளனர்.

எனவேஜனாதிபதி இந்த விட யத்தில் கூடிய கவனம் செலுத்தி பிள்ளைகளின் நலனின் அக் கறை கொள்ளவேண்டும் எனக் கேட்டு கொள்கின்றறேன். - என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிந்தவூர் விளையாட்டு மைதானத்தை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை!

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத் தில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்து அதனைப் புனரமைப்பு செய்வதற்கான ஆரம்ப கட்ட அளவியல் நடவடிக்கைகள் நேற்றுமுன் தினம் காலை நிந்தவூர் பிரதேச சபையின் தவிசா ளர் எம். ஏ. எம் தாஹிர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சிரேஷ்ட நில அளவையாளர் இக்பால் ஹச னின் திட்டமிலுடன் நவீனமயப்படுத்தப்படவுள்ள இந்த விளையாட்டு மைதானம் மிக முக்கிய மாக புனரமைப்பு செய்யப்படவேண்டிய ஒன்றாக காணப்படுகிறது.

அத்தோடு, கடந்த காலங்களில் பல அரசியல் வாதிகளால் வாக்குறுதி அழிக்கப்பட்டு இறுதித் தருவாயில் புனரமைப்பு வேலைகள் தடைப்பட்டி ருந்தன. மேலும், மழைக்காலங்களில் இந்த மைதானம் வெள்ளக்காடாக காட்சியளிப் பதோடு விளையாட்டு வீரர்களுக்கு பெரும் அசௌகரியங்களை தோற்று விக்க கூடியதாக வுள்ளன.

நிந்தவூர் பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் காணப்படும் இந்த பொது விளையாட்டு மைதானம் விரைவில் பூரணமாக புனர மைப்பு செய்யப்படுமெனவும், மைதான அபி விருத்தியில் மேற்குப் பக்கமாக ரசிகர்கள் போட்டி களை கண்டு ரசிப்பதற்கு பொருத்தமான அரங்கை அமைப்பதற்கும் இதில் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுமென தவிசாளர் தாஹிர் தின கரன் தெரிவித்தார்.

இதன்போது நிந்தவூர் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் வை. எல் சுலைமாலெவ்வை, பிரதேச சபை உறுப்பினர் ஏ. அஸ்பர் மற்றும் பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நில அளவையாளர் இக்பால் ஹசன் கண்டி அஸ்கிரிய சர்வதேச விளையாட்டு மைதானத்தை அளவியல் செய்து வடிவமைத் திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் பணி பகிஷ்கரிப்பு!

மட்டக்களப்பு, ஏப். 19

அம்பாறை திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள்தங்களின்கடமை களை மேற்கொள்வதில் சிலர் தடைகள் ஏற்படுத்தும் வகை யில் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் எனக் கூறி நேற்று பணிப்பகிஷ்கரிப்பில்ஈடுபட்டனர்.

இந்த நிலையில், வைத்திய சாலைக்கு வரும் வெளிநோயா ளர்கள் தங்களின் நோய்களுக் கான மருத்துவ நிவாரணங் களை பெற்றுக்கொள்ள முடி யாது சிரமப்பட்டுள்ளனர்.

பணமில்லாத காரணத்தால் வெளியில்மருந்துபெறமுடியாது நோயால் துன்பப்பட்டு வீட்டுக் குச் செல்கிறாம் என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக திருக் கோவில்ஆதாரவைத்தியசாலை யின் வைத்திய அத்தியட்சகர் பி. மோகனகாந்தன் தெரிவித் தவை வருமாறு:-

கடந்த சித்திரை புதுவருட தினத்தன்று நடந்த விபத்து சம்

பவத்தை அடுத்து ஆதார வைத் தியசாலையில் கடமை புரிகின்ற வைத்தியர்களுக்கு எதிராகச் சிலர் பல்வேறு முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களை சமூக வலைத் தளங்களில் பயன்படுத்தினர்.

அதன் காரணத்தால் மன முடைந்த வைத்தியர்கள் தாங் கள் இங்கு தொடர்ந்து பணிபுரி வது சிரமமான காரியமாக அமையும் என தெரிவித்து கல் முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனைக்கு முறைப்பாடுஒன்றை பதிவு செய்வதற்காக சென்றுள் ளனர்.

அதேவேளை, நோயாளி களின் நலன் கருதி வைத்திய சாலையின் அவரசரச் சிகிச் சைப் பிரிவு மற்றும் வைத்திய சாலை விடுதிகளில் அனுமதிக் கப்பட்டவர்களுக்கான மருத்துவ நடவடிக்கைகளை நான் தற் போதுமுன்னெடுத்துவருகிறேன் என்றும் வைத்திய அத்தியட் சகர் பி. மோகனகாந்தன் தெரி வித்துள்ளார்.

இந்த நிலையில், வைத்திய சாலையின் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட வைத் தியர்கள் மற்றும் மாவட்ட அதி காரிகளுடன் விசேட கலந்துரை யாடல் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளருடன் சந்திப்பு ஒன்றை மேற் கொள்ளும் வகையில் திருக் கோவில் பிரதேச சபை தவிசாளர் இ. வி. கமலராஜன் தலைமை யிலான ஆதார வைத்தியசாலை யின் அபிவிருத்தி குழு கல்மு னைக்கு சென்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (க)

இலங்கையில் நிதிசார் குற்றத்தைத் தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன!

கொழும்பு, ஏப். 19

இலங்கையில் நிதிசார் குற்றங்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்பு ஒன்றையும் அதன் காரணமாக ஏற்பட்ட யுத்தத்தையும் கருத்திற்கொண்டு இலங்கையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய ஒரு துறையாக நிதிக் குற்றம் தொடர்பான ஆபத்து இனங்காணப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

லண்டன் நகரில் நடைபெற்று வரும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கு இணைவாக இடம்பெற்ற நிதி சார் ஒழுங்கு விதிகள் பற்றிப் பேச்சில் கலந்து கொண்டு அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றினார்.

லண்டன் மென்ஷன் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்தக் காலத்தில் அதற்குத் தேவையான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, தற்போதும் நிதி சார் குற்றங்களைத் தவிர்க்கும் நோக்கில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த சில வருடங்களில் நிதிசார் குற்றச்செயல்கள் அதிகரித்திருந்தன. இந்த நிலைமை சர்வதேச நிதி நடவடிக்கைகளில் மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது அனைத்து மக்களுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இவ்வாறான மறைமுக விளைவுகள் வளர்முக நாடுகளின் வங்கி நடவடிக்கைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். உலக நிதி வலயமைப்பின் மூலம் வங்கிகளின் செயற்பாடு சீர்குலையும் ஆபத்து இருக்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நிதி ஒருங்கிணைப்பில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பது இலங்கை போன்ற நாடுகளுக்கு ஒரு சவாலாகும்.

2018 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நிதிவசதிகளைக் கொண்டு இலங்கையின் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பது இலங்கை அரசின் ஒரு பிரதான நோக்கமாகும் என்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அங்கு மேலும் கூறியுள்ளார்.

இந்த வருடம் உலக பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிக்கும்!

கொழும்பு, ஏப். 19

இந்த வருடத்தில் உலக பொருளாதார வளர்ச்சி வேகம் 3.9 சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் எதிர்வுகூறியுள்ளது.

இது, 2011ம் ஆண்டின் பின்னர், பதிவாகக்கூடிய கூடுதலான வளர்ச்சி வேக மாகும்.

சந்தை வாய்ப்பு மற்றும் சாதகமான மனோபாவம் என்பன இதற்குக் காரணமாகும் என்று நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குச் சந்தையின் வீழ்ச்சி மற்றும்

சர்வதேச நாணய நிதியம்

அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையில் வர்த்தக ரீதியில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டுக்கு மத்தியிலும் உலக பொருளாதாரம் வளர்ச்சி காணும் என்றும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

ஓட்டோக்களுக்கு மீற்றர் வெள்ளி முதல் கட்டாயம்

கொழும்பு, ஏப். 19

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஓட்டோக்களுக்கான மீற்றர்மானி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சாரதிகள் உள்ளிட்ட தரப்புக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரயாணிகளின் பாதுகாப்பையும், ஓட்டோக்களின் சேவையையும் உறுதிப்படுத்துவது இதன் நோக்கமாகும் என்று வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோதாகொட குறிப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சி நடிகை நீரில் மூழ்கி பலி!

கொழும்பு, ஏப். 19

கினிகத்தேனைப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கினிகத்தேனை யடிபேரிய பிரதேசத்தில் களனி கங்கையில் நீராட சென்ற தொலைக்காட்சி நடிகை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர் 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான கண்டி புப்புரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த துஷானி தசில்வா தொலைக்காட்சி ஒன்றின் நாடக நடிகை என தெரிய வந்துள்ளது.

கண்டியிலிருந்து தனது குடும்பத்துடன் கித்துல் கலவிற்கு சுற்றுலாச் சென்றிருந்த சமயம், நீராடச் சென்ற போது இவர் நீரில் மூழ்கியுள்ளார்.

இந்தநிலையில் நீரில் மூழ்கிகாணமற் போனவரை குடும்ப உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தேடியமையைத் தொடர்ந்து இவரின் சடலம் நீரில் மூழ்கிய இடத்தில் இருந்து சிறு தூரத்தில் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நடிகையின் சடலம் கிதுல்கல வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கினிகத்தேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறையில் 48,000 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 19

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்பு வேலைகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு விவசாயிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் 48 ஆயிரம் ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் இம்முறை சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

சேனாநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம், 26 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணிகளுக்கு பாசன வசதிகளை வழங்க போதுமானது என்று அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் தெரிவித்தார்.

கடந்த வருடத்தை விட குறைந்த நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

பொலிஸ் நடுபுறவு சுற்றுப் பயணம்!

கொழும்பு, ஏப். 19

வடக்கிலிருந்து தென் பகுதிக்குச் சமூக பொலிஸ் நட்புறவு சுற்றுப் பயணம் இடம்பெறவுள்ளது.

இன, மதங்களுக்கு இடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தை சகோதரத்துவத்தையும் மேம்படுத்தும் நோக்கில் வடக்கிலிருந்து தென் பகுதிக்கு சமூக பொலிஸ் நட்புறவு சுற்றுப் பயணம் ஒன்று நாளை வவுனியாவில் ஆரம்பமாகிறது.

சமூக பொலிஸ் பிரிவும் வவுனியா பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

வவுனியாவிலிருந்து குருணாகல், கம்பஹா, காலி, மாத்தறை ஊடாக கதிர்காமம் வரை பயணித்து, 20 ஆம் திகதி கதிர்காம கந்தன் ஆலயத்தில் விசேட வழிபாட்டு நிகழ்ச்சி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மஹியங்கனை, கண்டி, தம்புள்ளை, அனுராதபுரம் ஊடாக மீண்டும் சுற்றுப் பயணம் வவுனியாவைச் சென்றடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி பாவனை; அவதானம் தேவை!

பொது மக்களுக்கு அறிவுத்தல்

கொழும்பு, ஏப். 19

தற்போதைய மழையுடன் கூடிய கால நிலையில் இடி, மின்னல் தாக்கம் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு பொது மக்கள் அறிவுத்தப்பட்டுள்ளனர். விசேடமாக தொலைபேசி பயன்பாட்டின்போது மிகவும் அவதானமாக இருக்குமாறு வானிலை அவதான நிலையத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணா நாயக்க பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின!

கொழும்பு, ஏப். 19

கொழும்புப் பல்கலைக்கழக கல்வி பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மருத்துவ பீடத்தின் சகல மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின.

இதனால், மாணவர்களுக்கான விடுதிகள் நேற்று முன்தினம் முதல் திறக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கல்வி பீடத்தின் இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்கள் உள்ளிட்ட ஏனைய சகல பீடங்களினதும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும்.

அவர்களுக்கான தங்கு விடுதிகள் 22 ஆம் திகதி திறக்கப்படும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kālaikkathir

தமிழ்ப் புத்தாண்டு பலன்

எதிலும் நிதானமும், பொறுமையும், காரிய சாதனையும் செய்யும் மகர ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் சனிபகவான் 12 இல் இருப்பதால் எதிலும் கவனமுடன் செயற்படுங்கள். வீண் விரயங்களைத் தவிர்க்க சிக்கனமுடன் இருப்பது நல்லது. யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். நன்மை, தீமைகளை பகுத்தறியும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள். யாருக்கும் பிணை நிற்கும் விடயங்களில் தலையிட வேண்டாம். தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்வுடன் இருந்தால் வெற்றி நிச்சயம்.

குருபகவான் 11/10/2018 வரை உங்கள் ராசிக்கு 10 இல் இருப்பதால் சுயமரியாதைக் குறைவான நிகழ்வுகள், பணி செய்யும் இடத்தில் சுயமரியாதை குறைவான நிகழ்வுகள், மறைமுக எதிரிகளால் பிரச்சினை, உயரதிகாரி மற்றும் சக ஊழியர்களால் பிரச்சினை, பதவி இழப்பு மற்றும் பதவி மாற்றம், தனது தகுதிக்கு குறைவான செயல்களை செய்ய நிர்ப்பந்தித்தல், வீண் பழி உண்டாகும் என்பதால் கவனம் தேவை. 11/10/2018 இற்குப் பிறகு உங்கள் புகழ், கௌரவம், அந்தஸ்து, செல்வாக்கு அதிகரிக்கும். உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர் மற்றும் நண்பர்களால் ஆதாயம் அடைவீர்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு உண்டாகும்.

ராகு ,கேது முறையே 6/3/2019 வரை 7,1 இல் சஞ்சரிப்பதால் கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் வர வாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. குடும்ப விடயங்களில் வெளி ஆள்களின் தலையீட்டை தவிர்க்கவும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் பிரச்சினை உருவாகும் என்பதால் கவனம் தேவை. எதிலும் விருப்பமற்று வெறுப்பு, விரக்தி ஏற்படும். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து, நேர்மறை சிந்தனைகளை வளர்த்து கொள்ளுங்கள். இறைவழிபாடு, தியானம் நன்மை தரும்.

6/3/2019 இற்கு பிறகு ராகு, கேது முறையே 6,12 ஆக சஞ்சரிப்பதால் இது வரை இருந்த பிரச்சினைகள் நீங்கி மனம் தெளிவாகும். வழக்குகள் சாதகமான நிலை உருவாகும். எதிரிகள் விலகி செல்வார்கள். உடல் நிலை ஆரோக்கியம் பெறும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். ஆன்மிக பயணங்கள் செல்ல நேரிடும். மனதில் ஞானத் தெளிவு பிறக்கும். சிறுசிறு மருத்துவ செலவுகள் உண்டாகும்.

சனிபகவான் இந்த வருடம் முழுவதும் உங்கள் ராசிக்கு 12 இல் ஏழரைச்சனியில் விரைய சனியாக சஞ்சரிப்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். பண விடயங்களில் மிகவும் கவனம் தேவை. யாருக்கும் பிணை போன்ற விடயங்களில் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேவை யற்ற பிரச்சினைகள், வீண் வாக்கு வாதங்களை தவிர்க்கவும். தியானமும், இறைவழிபாடும் நல்லது. தனது கடமையில் தவறாமல் கண்ணும் கருத்துமாக செய்தால் அனைத்திலும் வெற்றி உண்டாகும். கடன் கொடுப்பது, புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

வியாபாரிகளே:

11/10/2018 வரை வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். கூட்டாளிகள் மற்றும் பணியாளர்களைக் கண்காணிப்பில் வைத்து கொள்வது நல்லது. 11/10/2018 க்கு பிறகு வியாபாரத்தில் நல்ல மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும்.

உத்தியோகஸ்தர்களே:

11/10/2018 வரை உத்தியோகத்தில் உயரதிகாரிகளால் பல பிரச்சினைகள் உருவாகும். சக ஊழியர்களிடம் வெளிப்படையாக பேசுவதைத் தவிர்க்கவும். பொறுமை தேவை. 11/10/2018 இற்குப் பிறகு உத்தியோகத்தில் நிலைமை ஓரளவு சீரடையும். இருப்பினும் கவனமுடன் இருப்பது நல்லது.

மாணவ, மாணவியர்களே:

11/10/2018 வரை படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற விடயங்களில் தலையிட வேண்டாம். ஆசிரியர்களின் சொற்படிக் கேட்டு நடந்து கொள்ளுங்கள். 11/10/2018 இற்குப் பிறகு படிப்பில் நல்ல முன்னேற்றம் இருக்கும். காதல் போன்ற விடயங்களில் நேரத்தை வீணாக்க வேண்டாம்.

அரசியல்வாதிகளே:

11/10/2018 வரை தலைமையிடம் கவனமுடன் இருங்கள். உங்களைப் பற்றிய வீண் வதந்திகள் பரவ வாய்ப்புள்ளமையால் கவனம் தேவை. சகாக்களிடம் எச்சரிக்கை தேவை. 11/10/2018 இற்குப் பிறகு தலைமையிடம் நெருக்கம் அதிகரிக்கும். தலைமை உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

கலைத்துறையினரே:

11/10/2018 வரை தற்போதுள்ள வாய்ப்புக்களைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். புதிய வாய்ப்புகள் தாமதமாகும். பொறுமை அவசியம். 11/10/2018 இற்குப் பிறகு புதிய வாய்ப்புகள் தேடி வரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உங்கள் திறமையால் புகழ் பெறுவீர்கள்.

பரிகாரம்:

ஏழை, எளியோர், ஊனமுற்றோருக்கு அன்னதானம், பண உதவி, மருத்துவ உதவி செய்தல்.

பறவைகளுக்கு உணவு அளித்தல்.

ஸ்ரீ சனிபகவான், ராகு, கேது, குருபகவானுக்கு ஹோமம், பூஜை மற்றும் ஆலயங்களில் வழிபாடு செய்தல்.

ஸ்ரீ சரபேஸ்வரருக்கு ஹோமம், பூஜை மற்றும் ஆலயங்களில் சென்று வழிபடுதல்.

எதிலும் சிந்தித்து எச்சரிக்கை உணர்வுடன் செயற்படும் கும்ப ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் சனிபகவான் 11 இல் இருப்பதால் உங்கள் நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். பணவரவு அதிகமாக இருக்கும். அசையும், அசையாச் சொத்துச் சேர்க்கை ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வெளியூர் மற்றும் வெளி நாடு பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

குருபகவான் 11/10/2018 வரை உங்கள் ராசிக்கு 9 இல் இருப்பதால் தெய்வ அனுகூலம் உண்டாகும். இது உங்களுக்கு அதிர்ஷ்டமான காலம். உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய ஆலோசனை கிடைக்கும். ஆன்மிக பயணங்கள் செல்வீர்கள். வெளியூர் மற்றும் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு கிடைக்கும். புகழ், பெருமை அதிகரிக்கும். கௌரவ பதவிகள் கிடைக்கும். 11/10/2018 இற்குப் பிறகு எதிலும் கவனமுடன் செயற்படுங்கள். உங்கள் செயற்பாடுகளில் மற்றவர்கள் எளிதில் குறை கண்டு பிடிப்பார்கள். எதிலும் முழு கவனத்துடன் இருப்பதும், செய்வன திருந்தச் செய்வதும் நல்லது.

ராகு, கேது முறையே 6/3/2019 வரை உங்கள் ராசிக்கு 6,12 இல் சஞ்சரிப்பதால் காரிய சாதனை செய்வீர்கள். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி ஏற்படும். நீண்டகால ஆசைகள் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். எதிரிகள் விலகி செல்வார்கள். வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நலம் பெறும். ஆன்மிக பயணங்கள் அதிகரிக்கும். இதுவரை இருந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் விடிவு காலம் பிறக்கும்.

6/3/2019 இற்குப் பிறகு ராகு, கேது உங்கள் ராசிக்கு 5,11 இல் சஞ்சரிப்பதால் குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. குழந்தைகளை கண்காணிப்பில் வைத்து அன்புடன் அரவணைத்து செல்வது நல்லது. பூர்வீகச் சொத்து விடயங்களில் கவனம் தேவை. குலதெய்வ வழிபாடு அவசியம். இருப்பினும் பல வகையில் ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் மற்றும் மூத்த சகோதரர்களின் உதவி கிடைக்கும். முயற்சிகள் வெற்றி அடையும்.

சனிபகவான் இந்த வருடம் முழுவதும் உங்கள் ராசிக்கு 11 இல் சஞ்சரிப்பதால் நீண்ட கால முயற்சிகள் வெற்றி பெறும். உங்கள் ஆசைகள் நிறைவேறும். பல வகையில் தனவரவு உண்டாகும். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சிகள் கைகூடும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். உடல் ஆரோக்கியம் பெறும். புகழ், மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மற்றவர்கள் பணிந்து செல்வார்கள். எதிலும் கட்டுப்பாடுடன் செயற்பட்டால் நிரந்தரமான, நிலையான வெற்றி பெறலாம். ஆணவத்தை தவிர்க்கவும்.

வியாபாரிகளே:

வியாபாரத்தில் பல வகையில் முன்னேற்றம் உண்டாகும். புதிய முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். கூட்டாளிகள் மற்றும் பணியாளர்களால் ஆதாயம் உண்டு. புதிய வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். உங்கள் நிறுவனம் பிரபலமாகும்.

உத்தியோகஸ்தர்களே:

உத்தியோகத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். உயரதிகாரிகள் உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப் படைப்பார்கள்.

மாணவ மாணவியர்களே:

படிப்பில் உங்கள் ஆர்வமும், நினைவாற்றலும் அதிகரிக்கும். ஆசிரியர்களின் சரியான வழிகாட்டுதலும், ஒத்துழைப்பும் கிடைக்கும். நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். படிப்பில் அதிக மதிப்பெண் எடுத்து சாதனை படைப்பீர்கள். அனைவரின் பாராட்டினைப் பெறுவீர்கள்.

அரசியல்வாதிகளே:

தலைமையிடம் நெருக்கம் அதிகரிக்கும். சகாக்கள் சாதகமாக செயற்படுவார்கள். மக்களிடையே உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். பிரபலமாவீர்கள். புகழ், மதிப்பு உயரும். தலைமை உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

கலைத்துறையினரே:

கலைத்துறையில் சாதனை படைக்கும் காலம். உங்கள் தனித் திறமையை வெளிபடுத்த கூடிய வாய்ப்புக்கள் அமையும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புகழ், பெருமை அதிகரிக்கும். சமூகத்தில் உங்கள் நிலை உயரும். பலரின் பாராட்டு கிடைக்கும்.

பரிகாரம்:

ஏழை, எளியவர் மற்றும் ஊனமுற்றோருக்கு பண உதவி, மருத்துவ உதவி செய்தல்.

ஆலயங்களில் அன்னதானம் செய்தல்.

ஸ்ரீ ராகு, கேது பகவான் மற்றும் குருபகவானுக்கு ஹோமம், பூஜை மற்றும் ஆலய வழிபாடு செய்தல்.

ஸ்ரீ லட்சுமி நாராயணனுக்கு ஹோமம், பூஜை மற்றும் ஆலய வழிபாடு செய்தல்.

கெப்பிட்டிபொல வான் விபத்து; ஒருவர் உயிரிழப்பு: 16 பேர்காயம்

வெலிமடை, ஏப். 19

வெலிமடைபொலிஸ்பிரிவுக் குட்பட்ட கெப்பட்டிபொல பகுதி யில் நேற்றுமுன்தினம் பிற் பகல் 3.30 மணியளவில் வான்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 17 பேர் படுங்காயங்களுக் குள்ளாகி வெலிமடைப் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் இதில்ஒருவர்உயி ரிழந்துள்ளார் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

வெலிமடை – நுவரெலியா பிரதான வீதியில் கதிர்காமம் பகுதியிலிருந்து கொழும்பு பகு தியை நோக்கிச் சென்ற வான் ஒன்றும் நுவரெலியாவிலி ருந்து கதிர்காமம் பகுதியை நோக்கிச்சென்றுகொண்டிருந்த மற்றுமொரு வானும் கெப்பட்டி பொலசந்தியில்இவ்வாறுமோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்தில் இரு வான்க ளிலும் பயணித்த 17 பேர் கடும் காயங்களுக்குள்ளாகி வெலி மடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் 10 பேர் மேலதிகசிகிச்சைக்காகப்பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்எனத்தெரி விக்கப்படுகின்றது.அதிகவேகம் மற்றும் கட்டுப்பாடில்லாததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும்பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்துடன் தொடர்பு டைய இருவான்களும்பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் சாரதி களும் கைது செய்துள்ளனர் எனவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் வெலிமடைப் பொலி ஸார் தெரிவித்தனர்.

தனியார் வகுப்புக்கு வருமாறு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தொல்லை கொடுக்கின்றார்களா?

1988இற்கு அறிவியுங்கள் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு , ஏப். 19

தங்களால் நடத்தப்படும் தனியார் வகுப்புக்களுக்கு வரு மாறு பாடசாலைகளில் மாண வர்களுக்குஅழுத்தம்கொடுக்கும் பாடசாலை ஆசிரியர்கள் தொடர் பாகக் கடுமையான நடவடிக்கை யெடுக்கப்படுமெனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரிய வாசம் அறிவித்துள்ளார்.

குறிப்பாக பாடசாலை ஆசிரி யர்கள்பலர்5ஆம்தரப்புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்களையும் , 11 ஆம்தரம்மற்றும்உயர்தரமாண வர்களையும் தமது தனியார் வகுப்புகளுக்கு வாருங்கள் என அழுத்தம் கொடுப்பதுடன் பெற் றோருக்கும் அது தொடர்பாக அழுத்தங்களைக் கொடுங்கின் றனர்எனத் தகவல்கள்வெளியா கியுள்ளன.

இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளா கின்றனர் எனத் தெரியவருகின் றது. இந்நிலையில் இந்த விட யம் தொடர்பாக மாணவர்களுக் கும் பெற்றோர்களுக்கும் 1988 என்ற தொலைபேசி இலக்கத் திற்கு அறிவிக்க முடியுமெனக் கல்விஅமைச்சர்தெரிவித்துள்ளார்.

பூநகரியில் 37 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

பூநகரியில் 50 லட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் இரவு 37 கிலோ கிராம் கேரளக் கஞ்சா பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி ஐம்பது லட்சம் ரூபா எனப் பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

பூநகரிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தக வலுக்கு அமைய பூநகரி சங்குப்பிட்டிப் பகுதியில்மேற் கொள்ளப்பட்ட சோதனையின்போது யாழ்ப்பாணத் திலிருந்து புத்தளத்துக்குப் பழைய இரும்பு மற்றும் பிளாஸ்ரிக் பொருள் சேகரிக்கும் தொழில் ஈடுப்படும் வானத்தின் மூலம் கடத்தப்பட்ட கேரளக் கஞ்சாவே கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப்படுகின்றன அவர்கள் கிளி நொச்சி நீதிவான்நீதிமன்றில்முற்படுத்தப்படவுள்ளனர்

இருவரிடையில் ஏற்பட்ட மோதல்; விலக்கச் சென்றவர் உயிரிழப்பு!

வட்டவளை பொலிஸ் பிரி விற்குட்பட்ட வட்டவளை தோட் டத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோதல் ஒன்றில் சிக்குண்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.அதேவேளை மோதலில் ஈடுப்பட்ட இருவர் பலத்த காயங்களுடன் வட்ட வளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பொலிஸ் பாது காப்புடன் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

வட்டவளை தோட்டத்தைச் சேர்ந்த இருவர் தங்களது வீட் டுக்கு அருகில்மது அருந்திவிட்டு வாய்தர்க்கத்தில்ஈடுபட்டுள்ளனர். பின்னர் இந்த வாய்த் தர்க்கம் சண்டையாக மாறியுள்ளது.

சண்டை தொடர்ந்த நிலை யில் இருவரும் மாறி மாறி கற் களால்தாக்கிக்கொண்டுள்ளனர். இதற்கிடையில் சண்டையை விலக்குவதற்காகச்சென்ற அதே தோட்டத்தைச் சேர்ந்த செங்கம் பொன்னுசாமி (வயது –73) என் பவர் நபர் கல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளாகி உயி ரிழந்த முதியவரின் சடலம் தற் பொழுது வட்டவளை வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. தாக்குத லில் ஈடுபட்ட இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவர்களைப் பொலிஸார் கைது செய்து வட்டவளை வைத்திய சாலையில் சிகிச்சைக்காகப் பொலிஸ் பாதுகாப்புடன் சேர்க் கப்பட்டுள்ளனர்.சம்பவம்தொடர் பில் மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றன.

நாடாளுமன்ற அமர்வை முடக்கிய வர்த்தமானியில் குறைபாடுகள்

புதிய வர்த்தமானியை வெளியிட வேண்டிய நிலை

கொழும்பு, ஏப். 19

நாடாளுமன்றத்தின் சபை அமர்வுகளை முடிவுக்கு கொண்டு வந்து சபையை ஒத்தி வைத்து வெளியிடப்பட் டுள்ள வர்த்தமானி அறிவித் தலில் காணப்படும் குறைபா டுகள் காரணமாக மீண்டும் சபையைக்கூட்டுவதில்சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமையு டன் அதில் மே 8 ஆம் திகதி சபை அமர்வு இடம்பெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அதில் நேரம் குறிப் பிடப்படாமையால்அன்றைய தினம் சபையைக் கூட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் புதிய வர்த்த மானி அறிவித்தல் ஒன்றை வெளியிட வேண்டியுள்ளது. ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அந்த வர்த்தமானி வெளியிடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக் கற்றல் நடவடிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தொழில்நுட்பப் பீடங்க ளின் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.பல்கலைக்கழக பதிவாளரால் நேற்று இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

விடுதி வசதி பெற்றுக்கொண்ட மாண வர்கள் அனைவரும் எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் விடுதிக்குத் திரும்ப முடி யும் என்றும் அந்த அறிவித்தலில் தெரி விக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் பணிப்

புறக்கணிப்பு காரணமாகப் பல்கலைக் கழகங்களின் கற்றல் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி பிரதிநிதிகளின் மாநாடு இலங்கையில்!

கொழும்பு, ஏப். 19

பொதுநலவாய நாடுகளினது உள்ளூ ராட்சிப் பிரதிநிதிகளின் அடுத்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய உள்ளூராட்சி ஒன்றியத்தின் குழுக் கூட்டத் தின்போது அடுத்த ஆண்டு பிரதிநிதிகள் கூட்டத்தை இலங்கையில் நடத்தத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இது ஆசிய நாடொன்றில் நடைபெறும் முதலாவது சந்தர்ப்பம் ஆகும். இந்த மாநாட்டில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா கலந்து கொள்ளவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 14,415 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை என்கிறது கிளிநொச்சி மாவட்டச் செயலகம்

முல்லைத்தீவு, ஏப். 19

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய பொதுமக்களில் தற்போதும் 14 ஆயிரத்து 415 குடும்பங்களுக்கு வீடுகள் தேவைப்படுகின்றன எனக் கிளி நொச்சிமாவட்டச்செயலகப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மீள்குடியேறியபோது புதிய வீடுகள் மற்றும் திருத்தம் செய் யப்பட வேண்டிய வீடுகள் 41 ஆயிரத்து 846 வீடுகள் தேவை யாகக காணப்பட்டன. இதில் 35 ஆயிரத்து 667 புதிய வீடுகளும், திருத்தம் செய்யப்பட வேண்டிய வீடுகள் 6 ஆயிரத்து 179 வீடுக ளும் காணப்பட்டன.

இதில் தற்போது வரையான காலத்தில் 26 ஆயிரத்து 564 வீடுகள் அரசு மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களால் அமைக் கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு, 867 வீடுகள் அமைக் கப்பட்டு வருகின்றன.

எனவே, தற்போதும், 14 ஆயிரத்து 415 வீடுகள் அமைத் துக்கொடுக்க வேண்டியுள்ளன எனமாவட்டசெயலகத்தின்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்தவருடம்தேசிய ஒருமைபாட்டிற்கும்நல்லிணக்கத் திற்கான அமைச்சின் மூலம் 7 ஆயிரம் வீடுகளும்,மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் 50 வீடு களும், தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபையின்மூலம் 171 வீடுகளும் கிடைக்கப்பெற வுள்ளன என வும் அந்தப் புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. (க–70)

காலைக்கதிர் Kalaikkathir

கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 29

பகுதி - I

6) "கொடுக்காத பொருள் வீணாகப் போகும்" இதைக் குறிக்கும் பழமொழி

1.ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு

2. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்

3. இட்டுக் கெட்டார் எங்குமில்லை

o வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

7) விளையாட்டு–மைதானம் எனின் மருத்துவம் - ?

1.வைத்தியசாலை 2.நூலகம் 3.பாடசாலை

8) கடல்- அலை எனின் மழை - ?

1.வெள்ளம் 2.உதவி 3.படகு

9) ஒரு வட்ட வடிவ மைதானத்தைச் சுற்றி சமதூர இடைவெளி கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. இரண்டு கம்பங்களுக்கிடையிலான தூரம் 5 m ஆகும். வட்ட வடிவ மைதானத்தை சுற்றி 12 கம்பங்கள் நடப்பட்டுள்ளன எனின் மைதானத்தின் சுற்றளவு யாது?

1. 48 m 2. 60 m 3.52 m

10) குறித்த ஆண்டின் மார்ச் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். அவ்வாண்டின் யூன் 10 ஆம் திகதி என்ன கிழமையாகும்?

1. வியாழக்கிழமை 2. ஞாயிற்றுக்கிழமை 3.திங்கட்கிழமை

11)பின்வரும் இலக்கங்களில் மையைப் பூசி அவ் இலக்கங்கள் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக்கோட்டின் வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது கிடைக்கும் எண் யாது?

118	

1. 118811
2. 118118
3. 811811

12)நீளம், அகலம், உயரம் ஆகியன 16 cm வீதமுள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து 4 cm நீளம், அகலம், உயரம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகள் வெட்டலாம்?

1. 16 2.32 3.12

13) 3m நீளமும் 4m உயரமும் உள்ள ஒரு பலகைக்கு பூச 4 லீற்றர் பூச்சு தேவைப்படுகின்றது. 2m நீளமும் 6m உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் தேவை

1. 2 லீற்றர் 2. 4 லீற்றர் 3. 8 லீற்றர்

14)சுதாவின் தந்தை சுரேஸின் மகன் எனின், சுதா சுரேஸுக்கு என்ன உறவு

1. பேரன் 2.பாட்டன் 3.மகன்

15)100 இன் ½ பங்குடன் 5 இனைக் கூட்டும் போது கிடைக்கும் எண்

1. 50 .2. 55 3.45

16)வெற்றிடத்திற்கு வர வேண்டிய விடையைத் தெரிவு செய்க.

21	B	27
18	3	6
A	12	9

1.A- 15 , B -24

2.A – 27 , B -15

3. A – 6 , B - 15

பின்வரும் தகவலைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

ரூ.X



ரூ 24



ரூ 50

17. ஒரு புத்தகத்தின் விலை என்ன ?

1. ரூ 20 2. 25 3. 30

18) ஒரு அன்னாசிப் பழத்தின் விலை என்ன ?

1. 12 2.24 3.16

19) இங்கு X எனக் குறிப்பிடப்பட்ட பெறுமதி என்ன ?

1. ரூ 18 2.ரூ 37 3.ரூ 32

பேசப்படும் சொல்லை விட
எழுதப்படும் சொல்லே
வலிமை வாய்ந்தது.
– ஹிட்லர்

சித்திரம் வரைந்து பார்ப்போம்!



பலவீனமே பலம்

சிறுவன் ஒருவன் ஜூடோ பயில விரும்பினான். அவனுக்கோ ஒரு விபத்தினால் இடது கை போய்விட்டது. எனினும் இந்தக் குறையைப் பொருட்படுத்தாமல், குரு ஒருவர் அவனுக்குப் பயிற்சி அளிக்க ஒப்புக் கொண்டார்.

தினமும் பயிற்சி அளித்தார் குரு. ஆனால் ஒரே ஒரு குத்து வித்தை தான் சொல்லிக் கொடுத்தார். நான்கைந்து மாதங்கள் சென்றன. அப்போதும் அதே பயிற்சிதான். சிறுவனுக்கோ ஒன்றும் புரிய வில்லை. ஆனாலும் தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டான்.

ஒரு நாள் சிறுவன் குருவைக் கேட்டே விட்டான். இந்த ஒரு குத்து போதும் உனக்கு என்று சொல்லிவிட்டார். நாள்கள் கடந்தன. குரு சிறுவனைப் போட்டிக்கு அனுப்பினார். ஒரு கையுடன் வந்த சிறுவனைப் பார்த்து பலரும் அற்பமாய் எண்ணினர். ஆனால் – நீங்கள் நினைத்தது சரிதான். வெற்றி சிறுவனுக்கே. தன்னை விட பலசாலிகளை எல்லாம் ஆக்ரோஷமாய் எதிர் கொண்டு வீழ்த்தி விட்டான். எல்லோருக்கும் ஆச்சர்யம். சிறுவனுக்கும்.

"எப்படி குருவே என்னால் ஒருகையை வைத்துக் கொண்டு, ஒரே ஒரு குத்துப் பயிற்சியை மட்டும் கற்று வெற்றி பெற முடிந்தது?" என்று கேட்டான்.குரு சொன்னார்: "இரண்டே காரணங்கள்தான். ஒன்று, நீ பயிற்சி செய்தது ஜூடோவிலேயே மிகவும் கடினமான குத்து. இரண்டு, இந்தக் குத்தை தடுக்க வேண்டும் என்றால் குத்துபவனின் இடது கையை மடக்க வேண்டும். உன்னிடம் அது இல்லை."

குருவுக்கு ஆத்மார்த்தமாக நன்றி சொன்னான் சிறுவன்.

வினாத்தாள் 27 க்கான பகுதி I இன் விடைகள்

1)
I.தோமஸ்
அல் வா எடிசன்
II.தொடங்கியது
III.அறிவு இயல்
IV.வீடு
V.தீபம்
VI..பேதை
2)
I.நிலாஅழகாகக் காட்சியளித்தது
II.வேளையில் மலைத்தொடரில்
3)
I.ஒளி
II.பாணம்
III.அறிய
4) I.வெற்றியும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப் படிகள்
II.ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்
5)
I.எந் நன்றி கொண்டாரக்கு முய்வுண்டாமுய் வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு
II.கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக
6)
I.நெய்தல்
II.ஊதாரி
II.மாற்றுத்திறனாளி
7) I.பூசிமெழுகுதல்
II.காலம் தாழ்த்துதல்
8)
I.வெண்கலம்
II.பலாப்பழம்
9)
I.நீங்கள் செல்வதற்குத் தயாரா?
II.நான் உள்ளே வரலாமா?
10)
I.Ball
II.Iron box
11)
I.மட்ட பத் தென்ன
II.ஓயா கப்பய்
மொக்கத
12)
I.உங்களுடைய பெயர் என்ன ?
II.நான் பாடம் படிக்கிறேன்
13)பொருத்தமான வாக்கியம்
14)
I.ஒன்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்து மூன்று
III.9000+500+403
15) C
16)16
17)640.00
18)10
19)
I.17:40
II.10மணித்தியாலம் 10 நிமிடம்
20)
I.5015
II.81 , 729
21) 19
22) 150.00
23) 2
24) 3
25) 1
26) 1
27) 2
28) 3
29) 3
30) 4
31) 1
32) 4
33) 2
34) 2
35) 3
36) 2
37) 3
38) 3
39) 1
40) 3
41) 1
42) 3
43) 2
44) 2
45) 4
46) 4
47) 3
48) 1
49) 1
50) 1

தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த ஆரம்ப சுகாதார சேவை என்பதன் அர்த்தமறிய இலங்கையை நோக்குங்கள்!

கொழும்பு, ஏப். 19

இலங்கையின் சுகாதாரத் துறையை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் பில்கேட்ஸ் பாராட்டியுள்ளார்.

லண்டனில்நடைபெறும்பொது நலவாய இராஜ்ஜியத் தலைவர்களது மாநாட்டின் கூட்டுபூர்வாங்க அமர்வில் பில்கேட்ஸ் உரையாற்றினார்.

இந்த மாநாடு 'பொதுவான எதிர்காலத்தை நோக்கி' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தரமுயர்ந்த ஆரம்ப சுகாதார சேவைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால், பொதுநலவாய நாடுகள் இலங்கையை நோக்க வேண்டும்.

சமகாலத்தில் பெருமளவு சுகாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்க்கும் வழி வகைகளில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

அத்தகைய புரட்சியை ஏற்படுத்த பொதுநலவாய அங்கத்துவ நாடுகளில் அனுசரிக்கும் சிறந்த நடைமுறைகளை ஒட்டுமொத்த உலகமும் வரித்துக்கொள்வது அவசியம்.

இந்த விடயத்தில் இலங்கையும், பங்களாதேஷும் முன்னணியில் திகழ்கின்றன. அந்த நாடுகளில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் கூடுதலாக பெண் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களால் முன்னெடுக்கப்படுகின்றமை சிறப்பம்சம் என்றும்- மைக்ரோ சொப்ட் டின் ஸ்தாபகத் தலைவர் பில்கேட்ஸ் குறிப்பிட்டார். (க)

சீதுவை தனியார் வங்கியில் கொள்ளை!

கொழும்பு, ஏப். 19

சீதுவைப் பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் நேற்றுக் காலை கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 9.05 மணியளவில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் கொள்ளையடித்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

தலைக்கவசம் அணிந்து துப்பாக்கி ஒன்றுடன் மோட்டார் சைக்கிளில் வந்து அவர் கொள்ளையிட்டுள்ளார். அத்துடன், கொள்ளையடிக்கப்பட்டபணத்தொகை இன்னும் மதிப்பிடப் படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநரை கைது செய்வதற்காக சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிறிய பொதுநலவாய நாடுகளுக்காக

வர்த்தக நிதி வசதிகளை ஏற்படுத்தும் இலங்கை!

கொழும்பு, ஏப். 19

சிறிய நாடுகளுக்கான வர்த்தக நிதி வசதியை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு நிதிப் பங்களிப்பு வழங்கப் போவதாக இலங்கை உறுதியளித்துள்ளது.

சிறிய அளவிலான நாடுகள் சர்வதேச சந்தைகளை அணுகக் கூடிய வசதி வாய்ப்புக்களைப் பெற வழிவகுப்பது இதன் நோக்கமாகும்.

இது தொடர்பான உடன்படிக்கையில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையின் சார்பில் கைச்சாத்திட்டார்.

லண்டனில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டுடன் இணைந்ததாக, இதற்குரிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2013ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் சிறிய நாடுகளுக்கான வர்த்தக நிதி வசதியை ஏற்படுத்தும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் மூலம் 50 லட்சம் டொலர்கள் வரையிலான நிதியுதவியை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் பொது நலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் சிறிய அளவிலான நாடுகள் 30 கோடி டொலர் வரையிலான வர்த்தக வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது.

சுதந்திரக் கட்சி பொதுச்செயலருக்கு எதிராக அமைச்சர்கள் போர்க்கொடி!

கொழும்பு, ஏப். 19

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் புதிய பொதுச் செயலாளர் நியமிக்கப்பட வேண்டும் என்று அண்மையில் கூட்டு அரசிலிருந்து விலகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

இதுதொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர கருத்து வெளியிடுகையில்-

ஐ.தே.கவுக்குப் பின்னால் நிற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் துமிந்த திசநாயக்க தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருக்க முடியாது.

எனவே,அண்மையில் அரசிலிருந்து விலகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், புதிய பொதுச்செயலரை நியமிக்க வேண்டும் என்று அழுத்தங்களைக் கொடுக்கவுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடுதிரும்பியதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடத்தப்படும்.

அதில், கூட்டு அரசில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்றும் நாங்கள் அழுத்தங்களைக் கொடுப்போம்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ். மாநகர மேயர் ஆனோல்ட் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு!

யாழ்.மாநகரமேயர்ஆனோல்ட் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட்குரே ஆகியோருக்கிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ்.மாநகரத்தை அழகுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டது.

மாநகரக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு வேண்டிய அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் மத்திய அரசின் உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தாம் தயாராக இருக்கிறார் என தேவை ஏற்படின் கோரிக்கையை முன்வைக்குமாறும் மாநகர மேயர் ஆனோல்டை வடமாகாண ஆளுநர் இதன் போது கேட்டுக் கொண்டார்.

ஹக்கல தாவரவியல் பூங்காவில் சூழல் மாசடைவு!

கொழும்பு, ஏப். 19

நுவரெலியா - ஹக்கல தாவரவியல் பூங்காவுக்குத் தற்பொழுது ஓரளவு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகள், தாங்கள் கொண்டு வரும் பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் கழிவுகளை பூங்காவிலும், வீதியோரம் மற்றும் வனப்பகுதிகளிலும் வீசி விடுகின்றனர்.

எனவே ஹக்கல பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் குப்பைகளை வீதியோரங்களில் வீசிசெல்லாமல் அவ்விடங்களில் வைக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளில் குப்பைகளைப் போட்டு செல்வதன் மூலம் சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - டொமினிக்கா இராஜதந்திர தொடர்புகளை மேற்கொள்ளத் தீர்மானம்!

கொழும்பு, ஏப். 19

இலங்கை அரசு பொது நலவாய அமைப்புக்கு உட்பட்ட நாடான டொமினிக்காவுடன் இராஜதந்திர தொடர்புகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலங்கைக்கான தூதுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியுமான டாக்டர் அமிரித் றொகான் பொரேரா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் டொமினிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி ஆகியோர் இது தொடர்பிலான உடன்படிக்கையில் கைச் சாத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சிரியாவில் இரசாயன ஆயுத தாக்குதல்; மூமாவில் சர்வதேச நிபுணர்கள் ஆய்வு

சிரியாவில் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்ட டூமா நகரில் நேற்று சர்வதேச நிபுணர்கள் ஆய்வு நடத்தினர். இதற்கு சிரியாவும், அதன் நட்பு நாடான ரஷியாவும் ஒப்புதல் அளித்து உள்ளன.

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப்போரில் ஜனாதிபதி அல் ஆசாத் அரசின் படையினர்தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைக் கொண்டுதாக்குதல் நடத்துகின்றனர் எனக் குற்றச்சாட்டு சர்வதேச அளவில் எழுந்துள்ளது.

இந்த நிலையில், அங்கு கிழக்கு கூட்டாப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள கடைசி நகரமான டூமாவில் கடந்த 7 ஆம் திகதி இரசாயன ஆயுததாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் உலக நாடுகளையெல்லாம் உலுக்கி விட்டது.

இந்த இரசாயன ஆயுததாக்குதலுக்கு சிரியாவில் உள்ள பார் அல் ஆசாத் அரசும், ரஷியாவும்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று அமெரிக்கா கூறியது. ஆனால், அவ்விரு நாடுகளும் இதை ஏற்க மறுத்தன. அத்துடன் இரசாயன ஆயுதாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியது நாடகம் என அவை கருத்து தெரிவித்தன.

ஆனால், சிரியாவில் நடந்த இரசாயன ஆயுத தாக்குதலுக்கு பதிலடியாக, அந்த நாட்டின் மீது கடந்த 14 ஆம் திகதி அமெரிக்க கூட்டுப்படைகள் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தின. இந்த தாக்குதலில், அங்கு அமைந்து இருந்த இரசாயன ஆயுத உற்பத்தி மையமும், இரசாயன ஆயுத கிடங்கும், இரசாயன ஆயுத பதுங்கு குழியும் நிர்மூலம் ஆக்கப்பட்டன.

இதற்கு இடையே சிரியாவில் இரசாயன ஆயுத தாக்குதல் நடந்த டூமா நகரில் ஆய்வு நடத்துவதற்காக ஓ.பி.சி.டபிள்யு என்னும் சர்வதேச இரசாயன ஆயுத கண்காணிப்பு அமைப்பின் நிபுணர்கள், டமாஸ்கஸ் நகருக்கு கடந்த 14 ஆம் திகதி சென்று அடைந்தனர்.

டமாஸ்கஸ்நகருக்குச்சென்று அடைந்த அவர்கள் டூமா நகருக்கு செல்வதற்கு, ரஷியாவும், சிரியாவும் அனுமதி அளிக்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகின. இதில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. சர்வதேச இரசாயன ஆயுதக் கண்காணிப்பு அமைப்பின் நிபுணர்கள், டூமா நகரில் ஆய்வு நடத்துவதற்கு சிரியாவும், ரஷியாவும் இப்போது ஒப்புதல் அளித்து உள்ளன.

இதையடுத்து, அங்கு நேற்று அவர்கள் சென்று ஆய்வு நடத்தினர். இரசாயன ஆயுதாக்குதல் நடைபெற்று 11 நாள்கள் ஆன நிலையில் அங்கு செல்கிற நிபுணர்கள், அங்கு இருந்து மண் உள்ளிட்ட பல்வேறு தடயங்களை சேகரிக்கவுள்ளனர்.

செய்தித் துளிகள்!!

சிரியா விவகாரத்தில் அமைதித் தீர்வு காண வேண்டும். இதற்காக ரஷ்யாவுடன் மத்தியஸ் தம் செய்யத் தயார் என ஜேர்மனியின் வெளி விவகார அமைச்சர் ஹெய்கோ மாஸ் கூறி உள்ளார்.

பாகிஸ்தானில் வீட்டு வேலை செய்த 10 வயது சிறுமியை சித்திரவதை செய்தனர் என மாவட்ட மேலதிக செசன்ஸ் நீதிபதி ராஜா குர்ரம் அலிகானுக்கும், அவரது மனைவி மாஹீனுக்கும் ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து இஸ்லாமாபாத் உயர் தீதிமன்ற நீதிபதி அமீர் பரூக் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

ஐ.நா. பொருளாதார, சமூக பேரவையின் பல்வேறு துணை அமைப்புகளுக்கு தேர்தல் இடம் பெற்றது. இதில் அரசு சாரா அமைப்புகளுக்கான குழுவுக்கு நடந்த தேர் தலில் இந்தியா அதிகபட்சமாக 46 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது.

மியன்மாரில் புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி, சிறையில் உள்ள 8 ஆயிரம் கைதிகளை விடுவிப்பதற்கு அந்த நாட்டின் புதிய ஜனாதிபதி மியிண்ட் உத்தரவு பிறப்பித்து உள்ளார்.

நுரையீரல் புற்றுநோயாளரின் ஆயுளை நீடிக்க புதிய சிகிச்சை

உலகம் முழுவதும் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ள நுரையீரல் புற்று நோயாளிகளின் வாழ் நாளை புதிய சிகிச்சைமுறை மூலம் நீட்டிக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோய் என்பது முழுவதும் குணப்படுத்த முடியாத ஒரு கொடூர நோயாகக் கருதுப்படுகிறது. குறிப்பாக பெரும்பாலானோர் நுரையீரல் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாசடைந்த காற்றை சுவாசிப்பதன் மூலமாக இந்த புற்றுநோய் ஏற்படுகிறது.

இந்த நிலையில், கீமோதெரபியுடன். இம்யுனோதெரபியையும் இணைத்து சிகிச்சை அளித்தால் புற்றுநோயாளிகளின் வாழ்நாளை அதிகரிக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட ஆய்வறிக்கையில்-

இம்யுனோதெரபியின் போது அளிக்கப்படும் பெம்பிரோலிசுமா மருந்தை

ஆய்வில் தகவல்

கீமோதெரபி சிகிச்சையுடன் வழங்கும்போது நுரையீரல் புற்றுநோயாளிகள் இறப்பு விகிதத்தை பாதியாக குறைக்கிறது. கீமோதெரபி சிகிச்சையை மட்டும் தனியாகச் செய்வதை விட இது அதிக பலன் அளிக்கிறது. நோயாளிகளை அதிக நாள் வாழ வைக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை முறை 616 நோயாளிகளிடம் சோதனை செய்யப்பட்டு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோர்ஜ் புஷ்ஷின் மனைவி மரணம்



வொஷிங்டன், ஏப்.19

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ்ஷின் மனைவியும், ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் தாயாருமான பார்பரா புஷ் தனது 92 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ். இவரது மனைவி பார்பரா புஷ் (வயது 92). இவர்களது மகன் ஜோர்ஜ் வாக்கர் புஷ் (வயது 71), 43 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர்.

பார்பரா புஷ் உடல் நலம் பாதிப்பு அடைந்துள்ளார் என ஹ்ஸ்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகம் அறிக்கை வெளியிட்டது. மேலும் அந்த அறிக்கையில், உடல்நலம் பாதிப்பு அடைந்துள்ள பார்பரா புஷ் விரைவில் நலம்பெற வேண்டும் எனப் பலர் பிரார்த்தனை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், பார்பரா புஷ் தனது 92 ஆவது வயதில் நேற்று மரணமடைந்தார் என முன்னாள் ஜனாதிபதி குடும்பத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

நாசாவின் புதிய விண்கலத்தை விண்ணில் செலுத்தத் தாமதம்

பூமி போன்ற கிரகங்களைக் கண்டுபிடிப்பதற்கான நாசாவின் புதிய விண்கலம் விண்ணில் செலுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவின் 'நாசா' மையம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சூரியனுக்கு அப்பால் உள்ள பூமி போன்று வாழத் தகுதியுடைய புதிய கிரகங்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் அது தற்போது இறங்கியுள்ளது.

அதற்காக 'டி.இ.எஸ்.எஸ்.' என்ற புதிய விண்கலத்தை உருவாக்கியுள்ளது. சலவை இயந்திரம் அளவுள்ள இந்த விண்கலத்தில் அதிசக்தி வாய்ந்த டெலஸ்கோப் மற்றும் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

2,200 கோடி இந்திய ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட இந்த விண்கலம் நேற்றுமுன்



தினம் மாலை 6.32 மணிக்கு புளோரிடாவின் கேப்கனவரல் தளத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் பால்கன் 9 ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட இருந்தது. ஆனால், ஒருசில தொழில் நுட்பக் கோளாறுகள் காரணமாக அந்த விண்கலம் விண்ணில் செலுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்த விண்கலம் இன்று விண்ணில் செலுத்தப்படலாம் எனக் கூறப்படுகிறது.

வீதியில் சுற்றித் திரிந்த விநோதமான மிருகம்!

ஆர்ஜென்டினாவின்சாண்டாபெ நகரின் வீதியில் சுற்றித் திரிந்த விநோத மிருகத்தால் பொது மக்கள் அச்சம் அடைந்து உள்ளனர்.

ஆர்ஜென்டினாவின்சாண்டாபெ நகரின் தெருவில் நடந்து சென்ற ஒரு விசித்திரமான மிருகம் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த விநோத விலங்கு பாதி மனிதனாகவும், பாதி மிருகமாகவும் இருந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது . இந்த மிருகம் கமராவில் பதிவாகுவதற்கு முன்னதாக இரண்டு நாய்களைக் கொன்று கூறப்படுகிறது.

இந்த மிருகம் ஜேர்மன் ஜெப் பார்ட் நாய் போலவும், ஒட்டகத்தை போன்ற நீண்ட கழுத்துடனும் சிறிய தலையுடனும் இருந்து உள்ளது. 2005 ஆம் ஆண்டில் இதே போன்ற ஒரு உயிரினத்தை சந்தித்தேன் என சமூக வலை தளத்தில் ஒரு நபர் கருத்து தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் சிறுமி பலாத்காரம் விவகாரம்:

பா.ஜ.க. அமைச்சர்கள் 9 பேரும் பதவி விலகினர்

காஷ்மீரில் சிறுமி பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப் பட்ட விவகாரத்தின் எதிரொலி யாக பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த 9 அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய் துள்ளனர்.

ஜம்மு – காஷ்மீர் மாநிலத் தின் கத்துவா பகுதியில் 8 வயது சிறுமி கடந்த ஜனவரி மாதம் பாலியல் வன்புணர்வுக்கு உள் ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பான தட யங்களை மறைத்தும், அழித் தும் திசை திருப்பினர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பொலி ஸார் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்துநடைபெற்ற பேரணியில் மெஹ்பூபா முப்தி தலைமையிலான கூட்டணி அமைச்சரவையில் இடம்பெற் றுள்ள பா.ஜ.க.வை சேர்ந்த இரு அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

சிறுமியைபலாத்காரம்செய்து கொன்ற குற்றவாளிகளுக்கு ஆ த ர வ ான பே ர ணி யில் ஆளும்கூட்டணியில்இடம்பெற் றுள்ளஅமைச்சர்கள் பங்கேற்ற சம்பவம் பா.ஜ.க. வினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் அந்தப் பேரணியில் கலந்துகொண்ட பா.ஜ.க. அமைச்சர்களான சந் திரபிரகாஷ் கங்கா, லால் சிங் ஆகியோர் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர்.

இந்தநிலையிலேயே, ஜம்மு – காஷ்மீர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அனைத்து பா.ஜ.க. அமைச்சர்களையும் உடனடியாக ராஜினாமா செய் யுங்கள் என பா.ஜ.க. மேலிடம் உத்தரவிட்டது. கட்சி அறிவுறுத் தலின் பேரில், 9 அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் ராஜினாமா செய்தனர். அவர்கள் மாநில பாரதிய ஜனதா தலைவர் சத் சர்மாவிடம் தங்கள் பதவி வில கல் கடிதங்களைக் கொடுத் துள்ளனர்.

பிரிட்டன் சென்றார் பிரதமர் மோடி

5 நாள்கள் வெளிநாட்டு சுற்றுப்பயணம் சென்றுள்ள பிரதமர் மோடி சுவீடன் பயணத்தை முடித்துகொண்டு பிரிட்டனைச் சென்றடைந்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தனது 5 நாள்கள் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக கடந்த திங்கட்கிழமை சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோம் சென்றார்.

அவரை அந்த நாட்டின் பிரதமர் ஸ்டீபன் லோப்வென், விமான நிலையத்துக்கு சென்று நேரில் வரவேற்றார்.

இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, சுவீடன் நாட்டின் மன்னர் 16 ஆம் காரல் கஸ்டாபை நேற்றுமுன்தினம் சந் தித்துப் பேசினார். பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்து ழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

அதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியும், சுவீடன் பிரதமர் ஸ்டீபன் லோப் வெனும் இரு தரப்பு பேச்சு நடத்தி னர். அதன் பின்னர் சுவீடன் நாட்டில் இருந்து புறப்பட்ட பிரதமர் மோடி பிரிட்டன் சென்றுள்ளார்.

ஹீத்ரோ விமானநிலையம் சென்ற பிரதமர் மோடியை பிரிட்டன் வெளியுறவு செயலாளர் போரிஸ் ஜான்சன் நேரில் சென்று வரவேற்றார். பிரதமர் மோடி, இன்று பிரிட்டன் பிரதமர் தெரசா மேவை சந்தித்து பேச்சு நடத்த உள்ளார். இந்த சந் திப்பின்போது இருநாட்டு தலைவர்களும் சில முக்கிய ஒப் பந்தங்களில் கையெழுத்திட உள்ளனர் எனத்தகவல் வெளியா கியுள்ளது.

மத்திய பிரதேசத்தில் மேம்பாலத்தில் இருந்து 'மினி டிரக்' கவிழ்ந்து விபத்து: 15 பேர் பலி

மத்திய பிரதேச மாநிலத்தில் சோன் ஆற்று மேம்பாலத்திலிருந்து 'மினி டிரக்' கவிழ்ந்து விபத் துக்குள்ளானதில் 15 பேர் பலியாகியுள்ளனர்.

மத்திய பிரதேச மாநிலம் சிதி மாவட்டத்தில் சோன் ஆற்று மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த 'மினி டிரக்' ஒட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுப்படுகையில் பாய்ந்தது. இந்த கோர விபத் தில், அதில் பயணம் செய்த 15 பேர் பலியாகினர். 14 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்டுள்ளது.

டிரக்கில் பயணம் செய்த அனைவரும் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சென்றவர் கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். காயம் அடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டுள்ளனர்.

விபத்து குறித்து தனது ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ள மத்திய பிரதேச முதல் அமைச் சர் சிவராஜ்சிங் சவுகான், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் இந்திய ரூபா வழங்கப்படும் எனவும் காயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் ஆனந்த் ஹெக்டேவின் பாதுகாப்பு வாகனம் மீது லொறி மோதல்

மத்திய இணை அமைச் சர் அனந்தகுமார் ஹெக் டேவின் பாதுகாப்பு வாகனம் மீது லொறி மோதிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

மத்தியதிறன்மேம்பாட்டுத் துறையிணை அமைச்சரான அனந்த குமார் ஹெக்டே, நேற்றுமுன்தினம் இரவு கர் நாடக மாநிலம் ஹவேரி மாவட்டத்தில் உள்ள ஹல கேரி என்ற பகுதி அருகே காரில் சென்று கொண்டி ருந்துள்ளார்.

இரவு 11.30 மணியளவில் எதிர்த்திசையில் இருந்துவந்த லொறி, திடீரென அமைச் சரின் பாதுகாப்பு வாகனம் மீது மோதியது.

இந்தவிபத்தில்பாதுகாப்பு வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதம் அடைந்தது. அதிஷ்டவசமாக இந்த விபத் தில் உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை. காரில்இருந்த பாதுகாவலர் ஒருவருக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து தனது டுவிட்டரில் லொறி மற் றும் அதன் டிரைவர் புகைப் படத்துடன் பதிவு வெளியிட் டுள்ள மத்திய அமைச்சர் ஹெக்டே, எனது உயிரை குறிவைத்து நடத்தப்பட்ட சம்பவமாக இருக்க கூடும் எனச் சந்தேகம் வெளியிட் டுள்ளார்.

இந்த சம்பவத்தைப் பார்க் கும்போது விபத்துப் போலத் தெரியவில்லை. ஓட்டுநர் திட்டமிட்டே எங்கள் வாகனத் தின் மீது மோத முயற்சித் துள் ளார்.

ஆனால், பாதுகாப்பு வாகனத்தின் மீது லொறி மோதியுள்ளது. நல்ல வேகத் தில் சென்று கொண்டிருந்த எனது கார், லொறி மோது வதற்கு முன்பே கடந்து சென்றுவிட்டது. இந்தவிபத்து சம்பவத்திற்கு பின்னால், மிகப்பெரியதொடர்புஇருக்கக் கூடும். பொலிஸ் உரிய விசா ரணை செய்து கண்டுபிடிக் கும் என்று நான் நம்புகிறேன் என்று.– அவர் தெரிவித்துள் ளார்.

40 ஆண்டுகளுக்கு முன் காணாமற் போனவர் 'யுடியூப்' உதவியால் மீட்கப்பட்டார்

40 ஆண்டுகளுக்கு முன் காணாமற் போனவர் 'யுடியூப்' உதவியால் மீட்கப்பட்ட சம்ப வம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூர் மாநிலம் இம் பாலை சேர்ந்தவர் கோம்தான் சிங். கடந்த 1978ஆம் ஆண்டு தன் சகோதரர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பால் அவர் வீட்டை விட்டு வெளியேறினார். அப் போது அவருக்கு வயது 26. அதன்பிறகு அவர் என்ன ஆனார்என்றேதெரியவில்லை. 40 ஆண்டுகள் கழித்து 'யுடியூப்' உதவியால் அவர் தற்போது மீட்கப்பட்டுள்ளார்.

தற்போது 66 வயதாகும் அவர், மும்பையில் நரைத்த தாடி, மீசையுடன் பழைய இந் திப்பாடல்களை பாடிவந்துள் ளார். அவரை பெரோஸ் ஷாகிர் என்ற புகைப்படக்காரர் கவ னித்தார். அவரைப் பற்றி அறிந்து கொண்ட அவர், அவரைப்பாடவைத்துவீடியோ எடுத்து அதை 'யுடியூப்' பக்கத் தில் வெளியிட்டார்.

அந்த வீடியோவை மணிப் பூரில் கோம்தான் சிங்கின் பக்கத்து வீட்டுக்காரர் பார்த்து விட்டு, அதை கோம்தான் சிங் கின் குடும்பத்தினரிடம் காட்டி யுள்ளார். இன்ப அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் இம் பால் பொலிஸிடம் முறையிட் டனர். இம்பால்பொலிஸார் மும்பைபொலிஸாரைதொடர்பு கொண்டு கோம்தான் சிங்கின் இளவயது படத்தை அனுப்பி வைத்தனர்.

அப்படத்தை வைத்து மும்பை பாந்த்ரா ரயில் நிலை யத்தில் கோம்தான் சிங்கை பொலிஸார் அடையாளம் கண்டனர். இதனையடுத்து அவர் மீண்டும் தனது குடும் பத்துடன் இணைந்துள்ளார்.

பொதுச்செயலாளர் இல்லாமல் அ.தி.மு.க. இயங்க முடியாது ; டி.டி.வி.தினகரன் தரப்பில் டில்லி உயர் நீதிமன்றத்தில் வாதம்!

பொதுச்செயலாளர் இல்லா மல் அ.தி.மு.க. இயங்க முடியாது என்று டில்லி உயர் நீதிமன்றத் தில் டி.டி.வி. தினகரன் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சர் எடப் பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல் வம் ஆகியோரின் ஒருங்கி ணைந்த அ.தி.மு.க. அணிக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கீடு செய்து தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து சசிகலா,

டி.டி.வி.தினகரன் சார்பில் டில்லி உயர் நீதிமன்றில் மேல்முறை யீட்டு மனுதாக்கல் செய்யப்பட் டது.

இந்த வழக்கு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு வந்த போது டி.டி.வி.தினகரன் தரப்பு வழக்கறிஞர் விவாதித்தவை வருமாறு:–

கட்சியின் பிரதான உறுப்பி னர்கள் அழைக்கப்படாமல் பொதுக் குழுவை கூட்டி புதிய விதிமுறைகளை ஏற்படுத்தி யுள்ளனர். அதே சமயம் முழு மையான விசாரணையை மேற்கொள்ளாமல் இரட்டை இலை சின்னத்தை ஒரு சாரா ருக்கு சாதகமாக தேர்தல் ஆணையகம் வழங்கியுள்ளது. இது முற்றிலும் விதிமுறை களை மீறிய நடவடிக்கை.

2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சசிகலா தரப்பின ருக்கு பெரும்பான்மை இருந்த தது. பின்னர் அரசியல்சூழ்நிலை மாறிவிட்டது. பொதுச்செயலா ளர் தான் கட்சியின் உச்ச பட்ச அதிகாரம் உள்ளவர். ஆனால் தற்போது பொதுச்செயலாளர் என்ற பதவியே இல்லாமல் கட்சியைநடத்துகிறார்கள். அ.தி. மு.க. பொதுச் செயலாளர் இல் லாமல்இயங்கமுடியாது.–என்று தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன லண்டனிலுள்ள இலங்கையர்கள் முன்னிலையில் தெரிவித்தார்.

எமது நாட்டில் உள்ள சில அச்சு ஊடகங்களும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் நாட்டில் காணப்படும் சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றை எந்தளவு முறையற்ற விதத்தில் உபயோகிக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

பொய்யான தகவல்களும் முறுகல் நிலையை ஏற்படுத்தும் விடயங்களும் அவற்றில் அடிக்கடி ஒளிபரப்பப்படுகின்றன. ஊடகம் ஒன்றில் காணப்படவேண்டிய பண்புகளை அவர்கள் எந்தளவிற்கு மதிக்கின்றனர் என்பதில் பிரச்சினை உள்ளது. அதனால் முறையற்ற விடயங்களை மக்களுக்கு வழங்குவதனால் நாட்டில் ஏற்படக்கூடிய பின்னடைவிற்கு அவர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்றுள்ள அவர், நேற்று முன் தினம் இரவு பிரிட்டன் வாழ் இலங்கையர்களைச் சந்தித்தார்.

இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீங்கள் இந்த நாட்டில் வாழ்ந்த போதிலும் எமது தாய் நாட்டைப் பற்றிய தகவல்களை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அவை எந்தளவுக்கு உண்மையானவை எனத் தெரியாது. இன்றும் என்னைச் சந்திக்க வந்த சில இலங்கையர்களுடன் நான் கலந்துரையாடினேன். தனிப்பட்டரீதியிலும் நிறுவனரீதியிலும் அவை அமைந்திருந்தன.

அதனூடாக எவ்வளவு தவறான, உண்மைக்கு புறம்பான தகவல்களை நீங்கள் அறிய முடிகின்றது என்பதை நான் புரிந்துகொண்டேன். இணையத்தினூடாகப் பெற்றுக்கொள்ளும் பிரகடனங்கள், செய்திகள் என்பவற்றுள் 75 சதவீதத்துக்கும் அதிகமானவை உண்மையானவையல்ல.

நானும் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சரும் இன்று பல கலந்துரையாடல்களில் ஒன்றாகப் பங்குபற்றினோம். அவரும் என்னுடன் இருந்தமையால் சில விடயங்களுக்கு என்னால் உறுதியான ஆதாரங்களைக் கூட முன்வைக்கக் கூடியதாக இருந்தது.

அண்மையில் எமது நாட்டில் கண்டிப் பிரதேசத்தில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையின்போது இடம்பெற்ற சில சம்பவங்களும் அவற்றுக்கான பின்னணி பற்றிய விடயங்களும் பெருமளவிற்குப் பொய்யாகப் பரப்பப்பட்டுள்ளன. அதேபோல் அரசால் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் உண்மையான தகவல்கள் பெருமளவு குறைவாகவே தெரிவிக்கப்பட்டுள்ளன.

பொய்யான தகவல்கள் எவ்வளவு வேகமாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அறியக் கிடைக்கின்றன என்பதை என்னால் உணர முடிந்தது. நீங்கள் சிலவேளைகளில் தினமும் உங்கள் பெற்றோர், உறவினர்கள், நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடுபவராக இருக்கலாம். ஆனால் உண்மையான விடயங்கள் மூடி மறைக்கப்பட்டு பொய்யான தகவல்கள் வேகமாகச் சமூகத்தைச் சென்றடைகின்றன என்பதாகவே நான் கருதுகின்றேன்.

நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் சரியான தகவல்கள் அறியக் கிடைக்காமை, அரசின் செயற்பாடுகள் பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லாமை போன்ற பல விடயங்கள் உள்ளன.

புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வடிவமைத்த நிபுணர்களும் விஞ்ஞானிகளும் சமூகத்தின் நிலவுகை, நீடித்து நிலைத்திருக்கும் தன்மை மற்றும் அவற்றின் எதிர்காலத்திற்காகவே அவற்றை உருவாக்கினார்கள். ஆயினும் அவை எந்தளவிற்கு முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்படுகின்றன என்பதை இன்று எமது நாடு மட்டுமன்றி முழு உலகுமே காண்கின்றது.

சமூக வலைத்தளங்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கே பெரும் பிரச்சினையாக மாறியுள்ளன. பல உலக நாடுகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கண்டியில் ஏற்பட்ட சம்பவத்தின்போது ஒரு சில மணித்தியாலத்திற்குள் நாம் அரசு என்ற வகையில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினோம். ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினோம்.

முப்படைகளைச்சேவையில் ஈடுபடுத்தினோம். சமூக வலைத்தளங்களை முற்றாக முடக்கினோம். பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இவற்றை நாம் மேற்கொண்டபோதும் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பலர் என் மீது குற்றம் சாட்டினர். சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது எல்லையை மீறி கருத்துக்களை வெளியிடத்தொடங்கினர்.

இவை எதற்கும் நாம் சளைத்து விடவில்லை - அச்சப்படவில்லை. எமது தீர்மானங்களை உரிய முறையில் மேற்கொண்டோம். ஒரு நாடு என்ற வகையில் ஏற்படவிருந்த பெரும் அழிவை எம்மால் தவிர்த்துக்கொள்ள முடிந்தது.

ஜக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனம் ஒன்று, அமெரிக்க அரசுக்கு முடியாத வொருவிடயமாகக்காணப்படும் சமூக வலைத்தளங்களை முடக்கும் செயற்பாட்டை இலங்கை அரசு வெற்றிகரமாகச் செயற்படுத்தியதாக அப்போது தெரிவித்தது.

மேலுமொரு நிறுவனம் கண்டிச் சம்பவத்தின்போது இலங்கை அரசு செயற்பட்டதைப் போன்று மியன்மார் அரசு மியன்மாரில் முதலாவது சம்பவம் இடம்பெற்றபோதே மேற்கொண்டிருந்தால் மியன்மாரில் இன்று இடம்பெறும் மோசமான சம்பவங்கள் இன்று அந்த நாட்டில் இடம்பெறாது இருந்திருக்கும் எனத் தெரிவித்தது.

சர்வதேச அமைப்புக்கள் எமது செயற்பாட்டை ஏற்றுக் கொண்டன. எமது நாட்டிலும் பெற்றோர் அதனை மிகவும் வரவேற்றனர். முடியுமாயின் நிரந்தரமாகவே அவற்றை தடை செய்யுமாறு அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள்.

க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் என்பவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் என்னோடு உரையாடினார்கள். தந்திகளை அனுப்பினார்கள், கடிதங்களை அனுப்பினார்கள், எனது அந்தச் செயற்பாட்டை பாராட்டினார்கள்.

அரசு என்ற வகையில் நாட்டிற்கான எமது பொறுப்பை நாம் தவறாது நிறைவேற்றுகின்றோம். சகல இனங்களுக்கிடையிலும் நிலையான அமைதியைக் கட்டியெழுப்ப சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வன்முறைகளற்றசமூகத்தைகட்டியெழுப்ப மீண்டும் போர் ஏற்படாத வகையில் செயற்பட நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

கடந்த மூன்றரை வருடங்களில் எமது அரசு பெரும் செயற்பாடுகளை ஆற்றியுள்ளது. அதற்கான பெறுபேறுகள் தற்போது கிடைத்துள்ளன. அந்த தகவல்கள் சரியான முறையில் மக்களை சென்றடைவதில்லை. பொய்யான விடயங்களே விரைவில் பரவுகின்றன.

எமது தாய் நாட்டின் எதிர்காலத்திற்கான தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பொருளாதார திட்டங்கள் உண்மையிலேயே சாதகமான பெறுபேறுகளை தரும். நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளும் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் எந்தவித குறைபாடுகளும் இல்லை.

அதேபோல் கடந்த மூன்றரை வருட காலத்திற்குள் சர்வதேச மட்டத்தில் நாம் பல வெற்றிகளை பெற்றுள்ளோம் - என்றார்.

2019 ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட அனைத்துத் தகுதிகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மட்டுமே இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

உரமானியம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுப்புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், விவசாயத்துறை அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க, இந்தத் தகவலை வெளியிட்டார்.

எவ்வாறாயினும், இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியேற்பு நிகழ்வில் வாக்குறுதி அளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கல்லூரிக்கு விஜயம் செய்த வேளை செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க இந்திய அரசு உதவ வேண்டும். தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் தற்போதைய நிலை குறித்து இந்திய அரசு ஆய்வு செய்யவேண்டும். அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கு இன்னும் அதிகமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு பல நன்மைகள் செய்துள்ள போதும் இன்னும் கூடுதல் உதவிகள் செய்யும் வாய்ப்புள்ளது. - என்றார். (ஐ)

இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வரவுள்ளார்.

சூகா, இலங்கை தொடர்பான போர்க் குற்றங்களை விசாரித்த தருஸ்மன் குழுவில் அங்கம் வகித்தவர். இலங்கைப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர் என தருஸ்மன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

சதியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

வவுனியா நகர சபைத் தேர்தலின் பின்னர் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், துரோகங்களைப் பார்க்கத்தான் வந்தோம் என்று கூறியிருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே சுரேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்து மிக நீண்ட நாள்களின் பின்னர்தான் சபைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்தச் சபைகள் அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறு கட்சிகளோ எவையும் எங்களுடன் பேச்சு எதனையும் நடத்தவில்லை. வடக்கு - கிழக்கு முழுவதும் எங்களுக்கு ஆசனங்கள் இருக்கின்றன.

அவ்வாறிருக்கையில் சபைகளை அமைப்பதற்குப் பல பேருக்கு எங்களது ஆதரவு தேவையாகவும் இருந்தது. ஆனால் அவர்கள் யாரும் சபைகளை அமைப்பது தொடர்பாக எங்களுடன் பேசியிருக்கவும் இல்லை. அவ்வாறு பேசுவதற்குத் தயாராகவும் அவர்கள் இல்லை. நாங்கள் ஏறத்தாழ ஒன்றரை மாதத்திற்கு முன்னர் கூட்டமைப்பு உட்பட எவரும் எங்களுடன் பேச வேண்டுமானால் அவ்வாறு பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கூறியிருந்தோம்.

ஆனால் அவ்வாறான பேச்சுக்கு யாரும் முன்வரவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் பொதுவானதொரு நிலைப்பாட்டை எடுத்திருந்தோம். அதன் பிரகாரமே யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சியிலும் யாருக்கும் ஆதரவு இல்லாத நடுநிலையை வகித்திருந்தோம். இறுதியாக நடைபெற்ற வவுனியா நகர சபையில் நடந்த தேர்தலில்முக்கியமாகமுஸ்லிம் தரப்பினர்கள் அல்லது ஆளுந்தரப்பினர்கள் வந்துவிடுவார்கள் என்ற காரணத்தினால் சிவில் சமூகத்தினால் எங்களுக்குப் பல வித அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

ஆனால் அவ்வளவு நடந்தும் கூடக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழரசுக் கட்சியினர்அல்லதுகூட்டமைப்பு என்ற பெயரில் இருக்கக் கூடியவர்கள் எம்முடன் இதுபற்றி கலந்தாலோசிக்கவில்லை. ஆனால்என்னுடன்சிவாஜிலிங்கம் பேசியிருந்தார். ஆனால் கூட்டமைப்பு சார்பாக அவரது பேச்சு இருந்ததாக நான் நம்பவில்லை. ஏனெனில் அவருடைய கருத்து ரெலோவின் கருத்து என்று மாவை சேனாதிராசாவும் ஏற்கனவே கூறியிருந்தார்.

அந்தவகையில்வவுனியாக் கூட்டத்திலும் கூட நாங்கள் நடுநிலை வகிப்பதாகத் தான் இருந்தது. ஆனால் அங்கு நிலைமைகளைப் பார்க்கின்றபோது தமிழரசுக் கட்சியினர் தோல்வியடைந்து அரசஆளும் கட்சியினரே வெல்லக் கூடிய சூழலும் அங்கிருந்ததை நாங்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறான சூழலில் நாங்கள் 3 பேர் தான் இருந்தாலும் கூடப் போட்டியிடவேண்டிய தொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த நிர்ப்பந்தம் எமக்குச் சிவில் சமூகத்தாலும் பொதுமக்களாலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில்நாங்கள் போட்டி போட்டோம். எமது கொள்கையின் பிரகாரம் நாங்கள் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க முடியாது. அதேபோன்று வேறு எவருக்கும் வாக்களிக்க முடியாது. அந்த வகையில் போட்டி போட்டதில் நாம் நியமித்த வேட்பாளர் ஏதோவொரு வகையில் வெற்றி பெற்றிருக்கின்றார். ஆகவே இது எந்த விதமான சதியும் அல்ல.

இதற்கு மேலதிகமாகச் சதியைப்பற்றிப் பேசுவதற்குச் சுமந்திரனுக்கு எந்தவிதமான யோக்கியமும் கிடையாது. அவர் நாடாளுமன்றுக்கு போனதில் இருந்து பிரதேச சபைகளை உருவாக்குவதில் பெரும் சதிகளை அவர் நடத்தியிருக்கின்றார். இங்கே சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகர சபை உட்பட பல சபைகளில் பெரும்பான்மை இல்லாதபோதும் கூட ஏனையோரின் ஆதரவைப் பெற்று அங்கே ஆட்சியமைத்திருக்கின்றார்.

ஆகவே அவ்வாறான சூழ்நிலையில் சதியைச் செய்பவரே சதியை நேரே பார்த்தேன் என்று கூறுவது எந்தவிதமான அர்த்தமும் இல்லாத விடயம். அது மாத்திரமல்லாமல் எல்லா இடங்களிலும் தாங்கள் ஆட்சியமைக்க விரும்புவதும் அவ்வாறு தாங்கள் ஆட்சியமைக்கா விட்டால் அது சதி என்று முத்திரை குத்தவதும் சதி செய்பவர்களின் இயல்பாக இருக்கலாமே தவிர இதில் வேறு எந்தவிதமான விடயமும் இல்லை. - என்றார்.

(ஐ-7)

ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட அரசியல் சபை 11ஆம் திகதி அலரி மாளிகையில் முதன்முதலாகக் கூடியது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இன்று கூடவுள்ள மறுசீரமைப்புக் குழு கூட்டத்தில் ஜக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகள் யாருக்குச் செல்லப் போகின்றன என்பது பற்றிச் சில தகவல்கள் கசிந்துள்ளன.

கட்சியின் தவிசாளராக இருந்த அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும், பொதுச் செயலாளராக இருந்த அமைச்சர் கபீர் ஹாசிமும், பொருளாளராக இருந்த எரான் விக்ரமரட்னவும் அண்மையில்தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தார்கள்.

இதன்படி ஜக்கிய தேசியக் கட்சியின்தவிசாளர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய முக்கிய பதவிகளே நிரப்பப்பட உள்ளன.

மேலும், கட்சியின் பொதுச் செயலாளர் பதவியின் அதிகாரங்களை ஊடகச் செயலாளர், பிரசார செயலாளர் மற்றும் தொழிற்சங்க செயலாளர் என மூன்றாகப் பகிர்ந்து பதவிகளை உருவாக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், செயலாளர் பதவிகளுக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அகில விராஜ்காரியவசம், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோரின் பெயர்களே பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (ஐ)

(மற்றொரு செய்தி 02 ஆம் பக்கத்தில்)

இலங்கைக் கிரிக்கெட்டுக்கு அரசியல்வாதிகளால் அழிவு

முரளிதரன் ஆவேசம்

இலங்கையின் கிரிக்கெட்டை அரசியல்வாதிகள் அழிக்கின்றனர்என இலங்கை அணியின் முன்னாள் சுழற் பந்து ஜாம்பவான் முத்தையா முரளீதரன் குற்றம்சாட்டியுள்ளார். இந்தியாவின் எக்கனமிக்ஸ் ரைம்ஸுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இந்தக் குற்றச்சாட்டைச்சுமத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் பாரிய குழப்பநிலையில் உள்ளது என்பதேஉண்மைஎன அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட்டை நிர்வகிக்கும் பொறுப்பை அரசியல்வாதிகள் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்த முரளிதரன், கிரிக்கெட் குறித்து அறிவு இல்லாத அவர்கள் நாளாந்தம் இலங்கைக் கிரிக்கெட்டை அழித்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

கிரிக்கெட் என்பது தன்னம்பிக்கையுடன் தொடர்புபட்டவிடயம். வீரர்கள் சிறப்பாக விளையாடுவதற்கான நம்பிக்கையை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள முரளீதரன், நான் ஒரே நாளில் தலைசிறந்த வீரனாக மாறவில்லை, நான்கைந்து வருடங்கள் அர்ஜுண ரணதுங்க எனக்குத் தேவையான நம்பிக்கையை வழங்கினார் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது துடுப்பாட்ட வீரர் ஒருவர் களத்தில் இறங்கும் ஒவ்வொரு தடவையும் அவர் சிறந்த முறையில் விளையாடாவிட்டால் அடுத்த போட்டியில் அவருக்கு இடமில்லை எனத் தெரிவிக்கின்றனர் என முரளீதரன் குறிப்பிட்டார்.

பந்துவீச்சாளர்களின் நிலைமையும் இவ்வாறானாதாகவேகாணப்படுகின்றது. கடந்த ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் இலங்கை அணிக்காக 60 வீரர்கள் விளையாடியுள்ளனர். இதுதொலைநோக்கம் எதுவும் இல்லாததை வெளிப்படுத்துகின்றது என வும் அவர் கூறினார். (ஐ)

கோஹ்லியிடம் இதயத்தை பறிகொடுத்தாராம் நடிகை

மும்பை அணிக்கெதிரான போட்டியின்போது விராட் கோஹ்லியின் ஆட்டத்தை பிரபல நடிகை ரவீணா டாண்டன் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

ஐபிஎல் தொடரில் நேற்று முன் தினம் 14ஆவது லீக் போட்டியில் விராட் கோஹ்லி தலைமையிலான பெங்களூர் அணி மோசமான தோல்வியைச் சந்தித்தது.

இப்போட்டியில் மும்பை அணி நிர்ணயித்த 213 ஓட்டங்களை தனி ஒருவனாகக் கடைசி வரை போராடிய கோஹ்லி 62 பந்துகளுக்கு 92 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

டி கொக், டி வில்லியர்ஸ் போன்ற வீரர்கள் ஆட்டமிழந்தும், தன்னம்பிக்கையுடன் இலக்கை அடையபோராடிய கோஹ்லிக்கு சமூக வலைத்தளங்களில் பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்துவருகின்றனர்.

ஆனால் இந்தப்போட்டிமுடிவுக்கு பின் பேசிய கோஹ்லி அதிக ஓட்டம் எடுத்து என்ன பயன்? அணி தோல்வியடைந்துவிட்டதே என்று மிகவும் விரக்தியில் பேசினார்.

இந்நிலையில் பிரபல நடிகையான ரவீணா டாண்டன் தன்னுடையடுவிட்டர் பக்கத்தில், தனி ஒருவனாகப்போராடிய கோஹ்லியின் ஆட்டத்தைக் கண்டு என்னுடைய இதயத்தைப் பறிகொடுத்துவிட்டேன், அற்புதமாக விளையாடினீர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

பிஞ்ச் விசித்திர சாதனை

ஆஸ்திரேலியாவின் ஆரம்ப ஆட்டக்காரர் ஆரோன் பிஞ்ச். இவர் ஐ.பி.எல். தொடரில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து விளையாடி வருகிறார்.

தற்போது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடி வருகிறார்.

இதன்மூலம் 11 தொடர்களில் 7 அணிகளுக்காக விளையாடியவர் என்ற தனிச்சிறப்பைப் பெற்றுள்ளார். கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு முன் ராஜஸ்தான் ரோயல்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், புனே வாரியர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், மும்பை இந்தியன்ஸ், குஜராத் லயன்ஸ் அணிகளுக்காக விளையாடியுள்ளார். (ஐ)

ஐ.பி.எல். வரலாற்றில் கோஹ்லி புதிய சாதனை

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் மொத்தம் 4619 ஓட்டங்கள் குவித்துள்ளதன் மூலம் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையை விராட் கோஹ்லி பெற்றுள்ளார்.

11ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் மும்பை- பெங்களூர் அணிகள் மோதிய நிலையில் மும்பை அணி வெற்றி பெற்றது.

பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோஹ்லி தனி ஆளாகப் போராடி 92 ஓட்டங்கள் குவித்தும் அந்த அணி தோல்வியடைந்தது.

இந்த 92 ஓட்டங்களையும் சேர்த்து கோஹ்லி மொத்தமாகஐ.பி.எல். கிரிக்கெட்டில் 4619 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் மூலம் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ள கோஹ்லி 4558 ஓட்டங்கள் எடுத்த சுரேஷ் ரெய்னாவின் சாதனையை முறியடித்துள்ளார். இந்த பட்டியலில் ரெய்னா இரண்டாமிடத்திலும், ரோகித் சர்மா மூன்றாமிடத்திலும், கவுதம் கம்பீர் நான்காம் இடத்திலும், டேவிட் வோர்னர் ஐந்தாமிடத்திலும் உள்ளனர். (ஐ)

மயிரிழையில் தப்பிய கண்!

மைதானத்தில் துடிதுடித்த வீரர்

பெங்களூர் அணிக்கெதிரான போட்டியின்போது ஹர்திக் பாண்ட்யாவின் த்ரோவில், விக்கெட் கீப்பரான இஷான் கிஷான் மைதானத்தில் வலியால் சிறிது நேரம் துடித்தார்.

நேற்றுமுன்தினம்பெங்களூர்-மும்பை அணிகளுக்கிடையேயான போட்டியில் பரபரப்பான சம்பவங்கள் பல நடந்தன.

ஓட்டமே எடுக்காமல் இரண்டு விக்கெட்டுகளை இழந்த மும்பை அணி



200 ஓட்டங்களுக்கு மேல் குவித்தது, அதன் பின்னர் பாண்ட்யா விவகாரத்தில் நடுவரிடம் கோஹ்லி வாக்குவாதத்தில் ஈடுபட்டது போன்றவை நிகழ்ந்தன.

அந்த வகையில் நேற்று முன் தினம் நடந்த போட்டியின் இளம் வீரரான இஷான் கிஷானின் கண் மயிரிழையில் தப்பியது.

ஆட்டத்தின் 13ஆவது ஓவரில் பெங்களூர் அணி வீரர் லெக் திசையில் பந்தை அடித்து விட்டு, ஓட்டங்கள் எடுத்தார்.

அப்போது இரண்டாவது ஓட்டத்திற்கு அவர்கள் ஓட முயற்சித்ததால், வேகமாக ஓடி வந்து களத்தடுப்புச் செய்த பாண்ட்யா, பந்தை அதே வேகத்தில் விக்கெட் காப்பாளர் இஷான் கிஷானுக்கு வீசினார்.

ஆனால் பந்தானது எதிர்பாராதவிதமாக கீழே பட்டவுடன், அவரின் முகத்தைப் பதம் பார்த்தது. பந்தானது வந்த வேகத்தில் பட்டதால், இஷான் மைதானத்தில் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்து துடித்தார். அதன் பின் மருத்துவர் வந்து முதலுதவிச் சிகிச்சை அளித்து அவரை அழைத்துச் சென்றார்.

பந்தானது இஷான் மேல் பட்டபோது ஓட்டம் ஓடிக் கொண்டிருந்த கோஹ்லி, அதிர்ச்சியடைந்ததுடன் சக அணி வீரர்கள் மற்றும் மைதானத்திற்கு வெளியில் இருந்த வீரர்களும் அதிர்ச்சி யடைந்தனர்.

போட்டிமுடிவுக்குப்பின்பேசிய ரோகித், இஷான் தற்போது நல்ல நிலை யில் உள்ளார். அதிர்ஷ்டவசமாக அவ ரது கண்களில் பந்துபடவில்லை, மருத்துவர்கள் 3 முதல் 4 நாள்கள் ஓய்வு எடுத்தால் சரியாகி விடும் என்று கூறியிருப்பதாக தெரிவித்தார். (ஐ)

உலகக் கிண்ணத்தில் அதிக அணிகள்; ஐரோப்பிய லீக்குகள் கடும் எதிர்ப்பு

கட்டாரில்நடைபெறஉள்ள உலகக் கிண்ண உதைபந்துத் தொடரில் 48 அணிகளைப் பங்கேற்க வைக்கும் பிபாவின் திட்டத்திற்கு, ஐரோப்பிய லீக்குகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் 32 அணிகள் பங்கேற்கும், உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் ரஷ்யாவில் நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து, 2022ஆம் ஆண்டு கட்டார் நாட்டில் உலகக் கிண்ணத் தொடர் நடைபெற உள்ளது.

ஆனால், இந்தத் தொடரில் 48 அணிகளை விளையாட வைக்க பிபா திட்டமிட்டுள்ளது. கூடுதலாக 16 அணிகள் பங்கேற்பதில் ஐரோப்பாவுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதாவது, கட்டார் நாட்டில் கடும் வெயில் இருக்கும் என்பதால், உலகக் கிண்ணத் தொடர் போட்டிகள் நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி வரை நடத்தப்பட உள்ளது. இந்நிலையில், கூடுதலாக 16 அணிகள் சேர்க்கப்பட்டால் போட்டிகள் அதிகரிக்கும்.

அத்துடன் நான்கு நாள்கள் கூடுதலாக விளையாட வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால், ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் லீக் போட்டிகளுக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். ஏனெனில், இந்த லீக் தொடர் தற்போது பாதி நிலையை எட்டியுள்ளது.

எனவே, உலகக் கிண்ண தொடரால் லீக் தொடர்களை தள்ளிப் போட முடியாது என்று ஐரோப்பிய லீக் குழுக்கள் தெரிவித்துள்ளன. கட்டாரில் உலகக் கிண்ண தொடருக்காக பிரம்மாண்ட மைதானங்கள் உருவாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Kings XI Punjab v Sunrisers Hyderabad

இன்று
18.04.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர் Kalaikkathir

அட்சய திருதியை நாளில் நேற்று யாழ்.நகரில்....



FRENCH LANGUAGE CENTER
FRENCH வகுப்புக்கள்
V.ஜெகன் (Trained in France -2017)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas
40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456/ 021 221 7681
ஆரம்பம் : 21.04.2018 சனி காலை 8 மணி.
181,பிரதான வீதி, நெல்லியடி
021 320 2973
ஆரம்பம் : 23.04.2018 சனி காலை 8 மணி.
திருமணம் ஆகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1, B1, Spoken English மற்றும் IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.